11-I-70

கோங்கேழ் சிவத்தல வரலாறு வகை (3).

திருநணுவென்னும்

# பவானித் திருத்தல வரலாறு.

(ஆராய்ச்சியும் ஆப்டோன் படங்களும் நிரம்பியது)



ACC.No. 26037
267 79/3

கோவை
சி. கு. நாராயணசாமி முதலியார்
தொகுத்தெழுதியது.

சிவமயம்.

## திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய

# தேவாரம்

### திருநணாவெனும் பவானி—பண்—காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

பந்தார் விரன் மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
யந்தா ரரவணிந்த வம்மானிடம் போலும் மந்தண் சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச்
செந்தேன் றெளி யொளிரத் தேமாக் கனியுதிர்க்குந் திருநணாவே.

நாட்டம் பொலிந் திலங்கு நெற்றியினன் மற்றொரு கைவீணையேந்தி
யீட்டுந் துயரறுக்கு மெம்மா னிடம்போலும் மலை சூழ் கானி
லோட்டந் தருமருவி வீழும் விசைகாட்ட முந்துந் தாழோசை
கேட்டார் மணிக ளணியுந் திரை சேர்க்குந் திருநணாவே. 2

நன்றுங் கிசைமொழிந்து நன்னுதலாள் பாகமாய் ஞாலமேத்த
மின்றுங்கு செஞ்சடை யெம்விகிர்தர்க் கிடம்போலும்
விரைசூழ் வெற்பிற்
குன்றேங்கி வன்றிரைகண் மோத மயிலாலுஞ் சாரற் செவ்வி
சென்றேங்கி வானவர்க ளேத்தி யடிபணியுந் திருநணாவே. 3

கையின் மழுவேந்திக் காலிற் சிலம்பணிந்து கரித்தோல் கொண்டு
மெய்யின் முழுதணிந்த விகிர்தர்க் கிடம்போலு மிடைந்து வாழை
ரையரவ ரெம்பெருமா னருளென் றுதரிக்கச்
செய்ய கமலம் பொழிதே னளித்தியலுந் திருநணாவே. 4

முத்தேர் நகையா ளிடமாகத்தன் மார்பில் வெண்ணூல் பூண்டு
தொத்தேர் மலர்சடையில்வைத்தா ரிடம்போலுஞ் சோலை சூழ்ந்த
வைத்தே னளியுண் களியா லிசைமுரல வாலத் தும்பி
தெத்தே யெனமுரலக் கேட்டார் வினைகெடுக்குந் திருநணாவே. 5

79/3

உ

சிவமயம்.

திருநணுவென்னும்

# பவானித் திருத்தல வரலாறு.

இது

பழநி, இனும்சங்கிராமநல்லூர், அவிநாசி, திருச்செங்கோடு,
மருதமலை, பேரூர், வாழைத்தோட்டத்து அய்யன் கோயில்
முதலிய சிவதல-சுப்பிரமணியத் தலங்களின் வரலாறு
களை ஆராய்ச்சி முறையில் வரைந்த

**கோவை, சி. கு. நாராயணசாமி முதலியாரால்**
தொகுத்தெழுதப்பெற்று

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26037

பவானி, பாங்கரும், தனவணிகரும் சங்கமேச்சுர சுவாமி
தேவஸ்தான தர்மகர்த்தருமாகிய

**உயர்திரு. பழ. ப. தேவராயன் செட்டியார் அவர்களால்**

கோயமுத்தூர் மாடர்ன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

**1943.**

பதிப்புரிமைபெற்றது.]

[விலை அணு நான்கு.

0 – 35 NP

## பொருள் அடக்கம்.


பக்கங்கள்

முகவுரை.
மதிப்புரை.
1. தோற்றுவாய் .... .... .... .... 1
2. ஊரும்—நாடும் .... .... .... .... 2
3. தலப்பெயரும்—காரணங்களும் .... .... 4
4. இடமும்—வழிகளும் .... .... .... 6
5. மூர்த்தியும்—பெயர்களும் .... .... .... 7
6. தீர்த்தங்களும்—வழங்கும் பெயர்களும் .... 9
7. வானி நதியும்—அதன் பெயருண்மையும் .... 10
8. காயத்ரி படித்துறை .... .... .... 14
9. திருத்தலத்தைத் தரிசித்துத் தீர்த்தங்களில் மூழ்கினோர்களும்—பேறுபெற்ரோர்களும் 17
10. கோட்டையும் — அதன் வலிமை, அரண் அமைத்தோர் வரலாறு முதலியனவும் 24
11. கட்டிநாடு, கட்டிநாட்டின் எல்லை, கட்டிநாடு ஏற்படக் காரணம், ஸ்ரீ கட்டி முதலியார் பரம்பரை வரலாறு, கோட்டைகள், ஏரிகள் ஆலயங்கள் முதலியன. கட்டி நாட்டில் புகழ்பெற்ற புலவர்களும்—சித்தர்களும் .... 27
12. திருக்கோயில்களும்—சிற்ப சித்திரங்களும் .... 39
13. கல்வெட்டுக்களும்—காணும் செய்திகளும் .... 50
14 ஸ்ரீ பராச முனிவரும்—அமுதலிங்கப் பிரதிட்டையும் .... .... .... .... .... 53
15. ஆடிப்பதினெட்டுக் காவிரிப் பெருக்கும் — கூடுதுறை முழுக்கும் .... .... .... 54
16. விழாக்களும்—நிகழும் காலங்களும் .... 56
17. புராணப் பிரபந்தங்களும்-பாடிய புலவர்களும்
18. கேரோ துரையும்—அவரது தெய்வ பக்தியும் .... 59
19. தல அமைப்பும்—ஜனத்தொகையும், பிறவும் .... 62
20. அநுபந்தம். .... .... .... ....
21. பிழையும்—திருத்தமும். .... .... ....



ஸ்ரீமான் பழ. ப. பிச்சப்ப செட்டியார் அவர்கள்.

இக்கனவானின் சிறப்புரையைப் பின்பக்கத்தில் பார்க்கவும்.

# சிறப்புரை.

---

முன்பக்கத்தில் உள்ள ஆப்டோன் படம், பவானியில் பிரபல பாங்கரும், நிலச்சுவான்தாரரும், "பவானி **ஸ்ரீ சங்கமேச்சுரர் – ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள்**" தேவஸ்தானங்களின் தர்மகர்த்தரும், தேவகோட்டைத்தனவைசிய மரபினருமாகிய ஸ்ரீ பழ. ப. தேவராயஞ் செட்டியார் அவர்களின் தமையனார் **ஸ்ரீ பழ. ப. பிச்சப்ப செட்டியார்** குமாரர் காலஞ்சென்ற **ஸ்ரீ பழ. ப. பிச்சப்ப செட்டியாருடையது.** ஸ்ரீ பிச்சப்ப செட்டியார் தேவகோட்டைத் தனவணிகர் மரபில் உயர் குடும்பத்தில் உதித்தவர். இளம்வயதினரெனினும் மிகவும் அன்பும் – பணிவும், ஆலய வழிபாட்டில் விருப்பமும், தெய்வ சிந்தையும், பரந்த நோக்கமும், தர்ம குணமும் மிக்கவர். இவ்விளைஞர் தமது ஜீவிய காலத்தில், பவானி தேவஸ்தானங்களின் விழாக்காலங்களில் அரும் பெரும் முயற்சியில் காரியங்களைச் சீராகக் கவனித்து விழாக்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு இயன்றளவு தமது சொந்தப் பொறுப்பில் பணத்தைத் தாராளமாகச் செலவு செய்து நல்லாரென எல்லாராலும் கொண்டாடப் பெற்றவர். கொடைக் குணம் நிரம்பிய இச்செல்வரின் ஞாபகார்த்தமாகவே "**பவானி திருத்தல வரலாறு**" அச்சிட்டு வெளிப்படுத்தும் பொருட் செலவின் பெரும்பகுதியை **ஸ்ரீ பழ. ப. தேவராரஞ் செட்டியார்** மனமுவந்து கொடுத்துதவினர்.

---

# முகவுரை.

"பவானிகூடற் புராணம்" செய்யுள் வடிவிலும், "பவானிகூடற் புராண வசனம்" பாட்டும், உரையுமான உருவிலும் இதற்கு முன்னரே அச்சேறி வெளிவந்திருந்தும் மூன்ருவதாக, "பவானித் திருத்தல வரலாறு" என்னும் இச்சிறு நூலும், அச்சுவாகனத்தமர்ந்து காகிதத்திற்குக் கடும் பஞ்சமும், ஒன்றுக்குப் பத்தாக விலையுயர்ந்துமுள்ள இக்காலத்தில் உயர்ந்த வெண்ணிறக் கடிதம், முத்துப்போன்ற புதிய எழுத்து, தல சம்பந்தமான உயர்ந்த ஆப்டோன் படங்கள், நல்லமைப்பு-வனப்பு ஆகியவற்றுடன் வெளிவர நேர்ந்தது—பவானி ஸ்ரீ சங்கமேசுவரர் தேவஸ்தான மானேஜராயிருந்து சென்ற வாரத்தில் இன்ஸ்பெக்டர் ஸ்தானத்தினுயர்ந்து கடலூருக்கு மாற்றப்பட்ட திருவாளர் S. முருகையா B. A. அவர்களது பெருமுயற்சியும், அந்நன்முயற்சிக்கு ஆதரவுதந்து அவர் விரும்பியவாறே பெரும்பணச் செலவில் தருமசீலரும், பாங்கரும், சிவதிருப்பணிக்கே தமது வாழ்நாளைச் செலவழிப்பதில் விருப்பமிக்கவருமான உயர்திரு. பழ. ப. தேவராயன் செட்டியார் அவர்களது அருட்குணமும், உபகாரச்செயலுமேயாம்.

இத்திருத்தல வரலாற்றைத் தொகுத்தெழுதுவதற்கு எனக்குப் பெரிதும் உதவியாயிருந்தவை, "பவாநிகூடற் புராணம் – கோங்குமண்டல சதகம் – தேவாரம் – திருப்புகழ்–கல்வெட்டுக்கள், ஜில்லா கெஜட்டீயர்-மான்யுல், கோங்கின் பழமை வரலாறு" முதலியன.

தாம் செய்யும் சிவதிருப்பணிகளில் இத் தமிழ்ப்பணியையும் ஒன்ருகக்கொண்டு மனமகிழ்ந்து இந்நூல் அச்சேறுவதற்குப் பொருள் உதவி நன்மைபுரிந்த பவானி, ஸ்ரீ சங்கமேசுவரர் தேவஸ்தானத்துத் தலைமைச் செயலாளர், உயர்திரு. பழ. ப. தேவராயன் செட்டியார் அவர்கட்கும், குறித்த காலம் தவருமல் சிரமப்பட்டு அச்சிட்டுத்தந்த மாடர்ன் பிரஸ் மானேஜர் திரு. S. C. பொன்னுசாமி செட்டியார் அவர்கட்கும் எனது அன்பார்ந்த வணக்கமும்-நன்றியும் என்றும் உரியதாகுக.

பேரூர்-கோவை, சுபானு சித்திரைத்திங்கள் முதல் நாள். } **சி. கு. நாராயணசாமி.**

# மதிப்புரை.

மதுரை-கரந்தை-கோவைத் தமிழ்ச் சங்கங்களின் அங்கத்தினரும்,
வரலாற்று-ஆராய்ச்சி வல்லுநருமான

**துடிசைக்கிழார் உயர்திரு. அ. சிதம்பரனுர் அவர்கள் எழுதியது.**

நண்பர் திருவாளர், சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் தொகுத்த "பவானித் திருத்தலவரலாறு" என்னும் நூலைக் கண்ணுற்றேன். அவர், தலவரலாறுகள் எழுதுவதில் கைதேர்ந்தவர். இம்முறையில் பேரூர், மருதமலை, அவிநாசி, பழநி, திருச்செங்கோடு முதலிய பல தலங்களுக்கு எழுதியுள்ளார். இவ்வரலாறு, சிவதலங்களுக்கு யாத்திரையாகச் செல்பவர்களுக்கும், கோவில் அர்ச்சகர்கள், தருமகர்த்தர்கள் முதலானவர்களுக்கும், தல மகிமைகளைப்பற்றி எளிதில் அறியவிரும்பும் அன்பர்கட்கும் பெரிதும் உபயோகமாயிருக்குமென்று நம்புகிறேன்.

இவ்வாசிரியர், தலவரலாறுகளைப் புதிய முறையில் புனைகதைகள் இன்றியும், வரலாற்று நூலுக்கு விரோதமில்லாமலும், புராண காலத்திற்குப்பின் நிகழ்ந்த வரலாறுகளையும் சேர்த்து எழுதியிருப்பது யாவராலும் பாராட்டத்தக்கது. இத்தகைய நூல்களை ஆங்காங்கு உள்ள ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் பாடபுத்தகமாகவோ, ஒழிந்த நேரங்களில் புத்தகசாலையில் படிக்கும் புத்தகமாகவோ ஜில்லா போர்டு ஆட்சிக்குழுவினர் ஏற்பாடு செய்தால் சிறந்த பயன் உண்டாகும்.

இம்மாதிரி நூல்களை இன்னும் இந்நூலாசிரியர் எழுதி உதவ அவருக்கு நீண்ட ஆயுளும், பிணியில்லாவாழ்க்கையும், நிறைந்த செல்வத்தையும், கொடுக்கவேண்டுமென்று வேதநாயகி சமேத சங்கமுகநாதரை மனமார வணங்குகின்றேன்.

துடிசைக்கிழார் அ. சிதம்பரனுர்.



ஸ்ரீமான் T. S. P. நஞ்சப்ப செட்டியார் அவர்கள்.

இக்கனவானின் சிறப்புரையைப் பின்பக்கத்தில் பார்க்கவும்.

## சிறப்புரை.

முன்பக்கத்தில் காட்டிய ஆப்டோன் படம், பவானியில் பிரபல வியாபாரியும் "**பவானி கூடல் அர்ப்பன் பாங்கியின்**" பிரசிடெண்டுமான ஸ்ரீ **T. S. P. N.** பெருமாள் செட்டியார் அவர்களின் தகப்பனார் காலஞ்சென்ற ஸ்ரீ **T. S. P. நஞ்சப்ப செட்டியாருடையது.** ஸ்ரீ நஞ்சப்ப செட்டியார் அவர்கள், பவானியில் தேவாங்கமரபினரில் உயர்ந்த குடும்பத்தில் தோன்றியவர். பவானியில் பிரபல வியாபாரியும், தெய்வபக்தியும், தர்மசிந்தனையும் உடையவர். "**பவானி கூடல் அர்ப்பன் பாங்கு**" ஸ்தாபிதம் செய்த முக்கிய பிரபலஸ்தர்களில் ஒருவராகவிருந்து மேற்படி பாங்கியின் முதல் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பாங்கியின் வளர்ச்சியில் அருந்தொண்டு செய்து வந்தவர். இப்பெரியாரது நினைவின் அறிகுறிகருதியே கூடல் அர்ப்பன் பாங்கியின் மேல் மாடிக்கு "**நஞ்சப்பஹால்**" என்று பெயரிடப்பட்டது. மற்றும் அந் நல்லார் ஞாபகார்த்தமாகப் "**பவானித் திருத்தல வரலாறு**" வெளிவருவதற்கு ஏற்படும் செலவில் ஒரு பாகத்தை **T. S. P. N. பெருமாள் செட்டியார்** அவர்கள் மனமுவந்து கொடுத்துதவினர்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருநணுவெனும்

# பவாநித் திருத்தல வரலாறு.

## விநாயகர் காப்பு.

நல்லவை நீடிமல்கத் தீயவை நலிய நாயேன்
சொல்லவை நல்லோர்சூழல் துலங்கிடத் திருநண்ணுவாழ்
வல்லபை யிடத்துவைத்த வாரண முகவன் றெய்வப்
பல்லவ மருட்டும் பைம்பொற் பதயுகம் பணிதல் செய்வாம்.

## தோற்றுவாய்.

கோங்குநாடு அல்லது கோங்குமண்டலம் என்ற பெயர் பெற்ற இத்திருநாடு, எல்லாவகையினும் இனிதுடையதாய் மங்கலமிக்கதாய், மாட்சிமை நிரம்பியதாய், "கோங்குமலிந் தால் எங்கும் மலியும்" என்னும் ஏற்றம்பெற்றதாய் விளங் கும் சிறப்பினையுடையது. "கோல்லிமலைத்தேன் சோரியும் கோற்றவா!" என்று கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர், சேர அரசனை விளிப்பதால், இம்மண்டலம், தேன்பிலிற்றும் வளப்பஞ்சிறந்து வையகமும், வானும் ஒருங்கே புகழும் மேன்மை பெற்றதாமெனின், அது மிகையாகாது. அம் மட்டோ! திருஅவிநாசி, திருமுருகன்பூண்டி, திருநணு, திருச்செங்கோடு, திருப்பாண்டிக்கோடுமுடி, வெஞ்சமாக்கூடல், கருவூர் என்னும் கோங்கேழ் சிவத்தலங்களும், திருப்பேரூர்,

*குரக்குத்தளி, குளிர்அறப்பள்ளி, ஏழூர், தோழூர், திருக்களந்தை ஆதித்தேச்சுரம் முதலிய தேவாரவைப்புத்தலங்களும், குன்றுதோறும் ஆடல்புரியும் குகப்பெருமான் கோயில்கொண்டருளும் சிவன்மலே, தென்சேரிமலே, சென்னிமலே, கதித்தமலே கஞ்சமலே, குருந்தமலே, ஓதிமலே, பழநிமலே, பொன்னூதிமலே, மருதவரை, வேள்ளிவேற்பு முதலிய அழகொழுகும் அரும்பெரும் மலேகளும் தன்னுட்சிறந்து விளங்கும் தகைமை சிறந்தும், மூவர் முதலிகள் தேவாரப்பண்களும், அருணகிரிநாதர் திருப்புகழ்ச் சந்தக்கவிகளும், புலவர்கள் புகழ்ந்து கூறிய புராணப்பிரபந்தங்களும், ஒருங்கேபெற்ற உயர்வுமிக்கதும் இக்கொங்கு நாடென்றால், இதன்பெருமை புகழ்தற்கு அரியதே. இத்தகைய நாட்டில் இனிது விளங்கும் திருநணுவென்னும் பவாநித் திருத்தலச் சிறப்பினே அழகுபெற விளக்குவதே இவ்வரலாற்றின் கருத்து. அச்சிறப்புக்கள் அடியில் வருமாறு:—

## ஊரும் — நாடும்.

நமது தென்னாட்டுத் தமிழரசர்கள் தமது அதிகாரத்தின் எல்லேக்குள் அடங்கிய நிலப்பரப்பைப் பல நாடுகளாகவும், கூற்றங்களாகவும், சீறூர், பேரூர்களாகவும் பிரித்து அவற்றிற்கு உரிய பெயர்கள் வைத்து வழங்கிவந்தார்கள். அப்பிரிவினேயைப் பின்பற்றியே கொங்கு நாட்டு அரசர்களும் தங்கள் ஆளுகைக்குள் அடங்கிய நிலப்பரப்புக்குக் "கோங்கு நாடு" "கோங்கு மண்டலம்" என்று பெயரிட்டனர். மண்டலம் என்பது ஒரு நாட்டினின்றும் பிளவுபட்டது.

* குரக்குத்தளி, கொங்கின் பெரியபாளேயம், ஏழூர், நாமக்கல்லுக்கு வடபுறமும், தோழூர் தென்புறமும் இருக்கின்றன.

அல்லது ஒரு வட்டம் அல்லது ஒரு கூறு என்ற பெயர்களை உடையது. நீண்டகாலமாகவே கொங்கு நாடு தனி நாடாகவே சிறப்புற்றிருக்கிறது.

சேலம் ஜில்லாவின் தென்பகுதியும், கோயமுத்தூர் ஜில்லாவும், மதுரை ஜில்லாவிற் சிறுகூறும் கூடியதே "கோங்கு ராச்சியம்." இதனை, கி. பி. 190-ஆம் ஆண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றுண்டுவரை கோங்கு மன்னர்களே அரசு செய்து வந்திருக்கின்றனர்.

காவிரி நதியின் வடபாகம் (சேலம் ஜில்லா) "வட கோங்கு" என்றும், தென்பாகம் "தென் கோங்கு" என்றும், மேற்பாகம் "மேல் கோங்கு" என்றும் பெயரிடப்பட்டன. இப்பகுதிகளை, இருபத்து நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. இப்பிரிவு, வன்றெண்டராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்ந்த காலமாகிய கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டிலேயே பிரிக்கப்பட்டதென்பது, "கோங்கில் குறும்பில்குரக்குத் தளியாய் குழகா! குற்றுலா!" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குரக்குத்தளித்தேவாரத்தால் விளக்கமாம். குரக்குத்தளி—திருப்பூருக்குக் கிழக்கேயுள்ள கூளிபாளையம் ரயில் நிலயத்திலிருந்து இரண்டுமைல் தூரத்திலுள்ள கொங்கின் "வைப்புத்தலம்." சுவாமி பெயர் "சுக்கிரீச்சுரர்."

கொங்கின் இருபத்து நான்கு நாடுகளில் பதினன்காம் நாட்டுக்கு "வடக்ரை நாடு" என்று பெயர். இந்நாட்டு உட்பிரிவு ஊர்களும் இருபத்திநன்கு எண்களையுடையவை. இவ்விருபத்துநான்கில் ஆறுவது இலக்கமுடைய சீறரே "பவாநி" எனும் திருப்பெயரைக்கொண்டது.

## தலப்பெயரும் — காரணங்களும்.

இப்பவாநி, கொங்கிற் சிறந்த கோயமுத்தூர் ஜில்லாவிற்குச்சார்ந்த பத்துத்தாலூகாக்களில் ஐந்தாவது தாலூகா. யாத்திரைத் தலங்களில் சிறப்புடையது. இது, தலபுராணத்திலும், மான்மியத்திலும், தேவாரம், உலா, மாலை, கோவை, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களினும் சிறப்பித்தும், பாராட்டியும் பேசப்பட்டிருக்கின்றன. மிகப்பண்டைக் காலத்திலிருந்தே பழமை பெற்ற இப்பவாநிப்பதியைக் கிழக்கினும், மேற்கினும், காவிரி, பவாநி என்னும் புண்ணிய நதிகள் சூழப்பெற்றதால் "கூடல்சங்கமம்" எனப்பெயர் வாய்ந்து, தன்னில் மூழ்குவோர்களின் கொடிய பாவங்களைப்போக்கி, உத்தமமான உயர்கதியில் உய்க்கும் மகிமையும் பெற்றது.

இனி, இச்சிவத்தலத்துக்கு வழங்கப்படும் பெயர்களைக்கவனிப்போம். பவாநி என்பது, சிவதிருப்பிராட்டியாராகிய பார்வதி அம்மையாரின் திருப்பெயர்கள் பலவற்றுள் பவாநி என்பதும் ஒன்று. சிறப்புப்பெயரையுடைய அப் பவாநி, காவிரிநதியுடன் கலக்கின்ற தலமாதலின், இதற்குப் பவாநி எனப்பெயர் வழங்கினர். இத்திருப்பதியைத் தரிசித்தோர்க்கு யாதொரு தீங்கும் நண்ணாதநற்றலமாதலின், "நண்ணாவூர்" அல்லது "திருநணா" எனப்பெயர் பெற்றது. இதுபற்றியே நணா என்ற பெயரால் ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையாரால் தேவாரம் பாடப்பட்டது போலும். குபேரன் பூசித்தலால் "தட்சிண அளகை" என்றும், இலந்தை மரம் தலவிருட்சமாகச்சிறந்து விளங்குவதால் §"தட்சிணவதரிகாச்

§ வதரி என்ற வடசொல்லுக்குத் தமிழில் இலந்தை மரம் என்பது பொருள். ஆச்சிரமம் = முனிவர் இருக்கை.

சிரமம்" என்றும், வடநாட்டில் கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மகாநதிகள் கூடுவதுபோல இங்கும் காவிரி, பவாநி, அமுத நதி என்ற மூன்று மகாநதிகளும் கலப்பதால் "திருவேணி சங்கமம்" "தட்சிணப்பிரயாகை" என்றும் திருமுக்கூடல், திருவாநி கூடல் என்றும், மற்றும், தென் கயிலை, பராசர்க்ஷேத்திரம், வக்கிரபுரம், என்றும், இவ்வாறு சிறப்புப்பெயர்களும், காரணப்பெயர்களும் பெற்று இப் பவாநித் திருத்தலம் சிறப்புடன் விளங்குகின்றது.

மற்றும், இத்திருநணு, "சங்ககிரி" என்ற சங்கமலையும், நாககிரி என்ற திருச்செங்கோட்டு மலையும், மங்கலகிரி என்ற மங்கல மலையும், வேதகிரி என்னும் ஊராச்சிக்கோட்டைமலை யும், பத்மகிரி என்னும் பதுமமலையும் தன்னைச்சூழப்பெற்று தான் அவைகட்கு நடுநாயமாக விளங்கும் சிறப்பினையும் உடையது.

மேலும், செவ்விய சிவ நலங்கள் மன்னிய இத்திருத் தலத்தின் ஒப்புயர்வற்ற பெருமையைச் சீர்காழி, ஸ்ரீ ஞான சம்பந்தப்பிள்ளையார், கொங்கு நாடடைந்து:—

"அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலும் சென்றேத்தித் திருநணுவினை யிறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப் (327.)

பாடிய தேவாரத் திருப்பாட்டில் அழகுபெறப்பாராட்டி யிருக்கின்றனர். மேலும் அவர்,

"வானவர்கள் ஏத்தி அடிபணியும் திருநணுவே." (2)
"கேட்டார் வினைகெடுக்குந் திருநணுவே." (3)
"செல்லாவரு நெறிக்கே செல்லவருள்புரியும் திருநணுவே"(6)

"தேனூர்மலர் கொண்டடியா ரடிவணங்குந் திருநணுவே" (7)
"பொய்யா மறையானும் பூமியளந்தானும் போற்ற மன்னிச்
செய்யா ரெரியா முருவமுற வணங்குந் திருநணுவே" (9)

என்ற தேவாரத்துச்சொற்றொடர்களில், தலத்தின் உயர்வும்,

"......நதிசேரு நித்திலமு மொய்த்தகிலுங் கரையிற் சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றியொளி பெருகுந்
திருநணுவே" (10)

"இலைசூழ்காவில்
ஓட்டந் தருமருவி வீழும் விசை காட்ட முந்துமோசைச்
சேட்டார் மணிகளணியுந் திரை சேர்க்குந் திருநணுவே" (2)

என்ற அடிகளால் நதியின் சிறப்பும்,

"..................அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் றெளியொளிரத் தேமாக்கனி யுதிர்க்குந்
திருநணுவே" (1)

............சோலைசூழ்ந்த
"வத்தேனளியுன் களியா லிசைமுரல வாலத்தும்பி
தெத்தேயெனமுரலக் கேட்டார் வினைக்கெடுக்குந்
திருநணுவே." (5)

என்ற திருப்பாட்டுக்களின் அடிகளால் சோலைவளமும், தேன்பொழியும் வளமும் இனிது விளங்குதல் காண்க.

## இடமும் — வழிகளும்.

பிரசித்திப்பெற்ற ஈரோட்டிலிருந்து நேர் வடக்கில் பதினொருவது கல்லிலுள்ள பவாநி என்னும் சிவஸ்தலத்திற்கு நவீன நாகரீகமான ரயில்வண்டியில்லை. ஆயின், நாற்றிசைகளினின்றும் வசதியாக வருவதற்கு நல்ல

வழிகள் இருக்கின்றன. விரைந்தகதியில் மின்னல் வேகத்தில் வருகின்ற மோட்டார் பஸ்களும், குதிரை, மாடுகள் கட்டிய வில்வண்டிகளும், ஏராளமாக எளிய கூலிக்கு எப்பொழுதும் எந்த நேரத்திலும் இருக்கின்றன. தெற்குத் திசையிலிருந்து, பெருந்துறை, ஈ ரோ டு, சென்னிமலே, காங்கேயம், தாராபுரம் முதலிய ஊர்களினின்றும் வருபவர்கள் ஈரோடுசேர்ந்து பவானியடையலாம். மேற்கிலிருந்து கோள்ளேகாலம், சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளேயம், முதலிய ஊர்களினின்றும்; சேலம், மேட்டூர், அந்தியூர் முதலிய இடங்களிலிருந்தும் வருபவர்கள், நேராகப் பவாநி வந்து சேரலாம். திருச்சிஞப்பள்ளி, கருவூர், கோடுமுடி முதலிய ஊர்களினின்றும் வருபவர்கள், தென்னிந்திய ரயில் வழியிலும், பஸ்மூலமாகவும், கல்லிக்கோட்டை, போள்ளாச்சி, கோயமுத்தூர் முதலிய இடங்களிலிருந்தும் வருபவர்கள் போத்தனூரடைந்து ரயில் வழியிலும், பஸ்மூலமாகவும் பவாநி சேரலாம்.

## மூர்த்தியும் — பெயர்களும்.

"பண்ணுரு மறையோனும் பாலாழி துயின்ரோனும்
படிவம் வேருய்
விண்ணுடி மண்ணிடந்துங் காண்பரிய பேரொளியாய்
மெய்யன் புள்ளோர்
உண்ணுடும் பூரணமாய்ப் புவனசரா சரவுயிருக்
குயிராய் ஞானக்
கண்ணுகி நண்ணுவில் விற்றிருந்த சிவக்கொழுந்தைக்
கருத்துள் வைப்பாம். (தலபுராணம்.)

பழைமையும், பண்பும், அறிவும் அன்பும், பெருமையும், கீர்த்தியும் மிகுந்த நமது கொங்கின் பழவரசர்களது வலிமை

சிறந்த மண் கோட்டையின் நடுவில், அறம் பெருக்கிய அன்பர்களாலும், செல்வத்திறம் நிரம்பிய ஸ்ரீமான்களாலும் பெருந்தொகையில் அழகுபெற எடுப்பிக்கப்பெற்ற பெருந்திருக்கோயிலில், சிறப்புடன் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குச் "சங்கமேச்சுரர்." "சங்கமேசர்," "சங்கமலிங்கர்" என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. காவிரியும், பவானியும் ஒன்று கூடும் சங்கமத்தின் இடையில் இறைவன் ஆவுடையாருடன் கூடி இலிங்காகாரமாய் ஆலயங்கொண்டு அருள்வதால், "சங்கமுக ஈச்சுரர்" என்று பெயர் பெற்றனர். சங்கமம்=கூடுதல், அல்லது கலத்தல் என்பது பொருள். ஈசுரர்=கடவுள். இவ்விரு சொற்களும் சேர்தலால் சங்கமேச்சுரர் ஆயினர். இப்பெருமான், புராணத்திலும், பிரபந்தங்களின் துதிகவிகளிலும், பலவாறுகச் சிறப்பித்துப் பாராட்டப்பெற்றிருக்கின்றனர். அவைகள்:— "ஞானக் கண்ணுகி நண்ணுவில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தை"

"கூற்றினுயிர் குடித்த செம்பொற் கழலானைக்
கனியிலந்தை நிழலானை"

"பரம்பொருளாய்த் திருவதரி நிழன்முளைத்த
சிவக்கொழுந்தை"

"மங்கள கரம்பொலி பவாநிநதி பொன்னி
சங்கம மனேகரன்"

"கங்கையணி வேணிய கலாதர பவாநி மங்கையருணன்
மறைமடந்தை மணவாளன்"

"மையார் மணிமிடற்றன்"

"மங்கையோர் பங்குடையான்"

"நீர்பெறு பவாநி காவிரி சூழ்ந்த நிலையன்"
"நனுவின் நிர்க்குனன்"

என்பன. தேவியின் திருப்பெயர்கள்:— வேதநாயகி, வேதவல்லி, போன்னார்மேளலி, பண்ணார் மோழியாள் என்பன.

## தீர்த்தங்களும் — வழங்கும் பெயர்களும்.

சீர் சிறந்த இச்சிவதலத்தில் விளங்கும் பல்வேறு தீர்த்தங்களுள் பெயரினும், புகழினும், புனிதத்தன்மையினும் மிக்குயர்ந்து விளங்குவன, கா வி ரி, ப வா நி என்னும் பெயரின. நீண்டு பரந்துள்ள இவ்விருநதிகளும் ஸ்ரீ சங்கமேச்சுரர் திருவாலயத்தின் இருபுறத்தினும்பெருக்கெடுத்துத் தெற்கினுள்ள அழகிய படித்துறையில் ஒன்று கூடுகின்றன. எந்நாட்டினுஞ் சிறந்த நன்னாடாகிய இத்தென்னாட்டின் புண்ணியநதிகள் பலவற்றுள்ளும் பெருஞ் சிறப்புடன் பல்லோரானும் புகழ்ந்து பாராட்டப்படுவது காவிரி நதியேயாம். "தட்சிண கங்கை" என்றும், "தெய்வநதி" என்றும் யாவரானும் ஒருங்கே புகழப்படுவதும் இக்காவிரி நதியே. இதன் ஒப்பற்ற பெருமைகருதியே கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் "தண்ணீருங் கா்விரியே!" என்று புகழ்ந்து பாடினர். தேகத்திற்கு நோயின்மையையும், ஆ த் ம சுத்தியையும் அளிப்பதில் இந்த நதிக்கு இணைகூற வேறு நதிகளில்லையென்பது பலருடைய துணிபு. இத்தகைய உயர்வுகருதியே இதனைப் "போன்னி" என்று புகழ்ந்து பேசினர் புலவர். பொன்னி = பொன்னையுடையவள். "வான் பொய்ப்பினும் தான் பொய்யாத மகிமை மிக்க இக்காவிரி நதி" மேற்குத் தொடர்ச்சி மலையினுள்ள "குடகுமலையில்"தோன்றி, மைசூர்

இராச்சியத்தில் பரவி கோயமுத்தூர்ச் சில்லாவில் பிரவேசிக்கிறது. இந்நதி மைசூருக்கு மேற்கிலுள்ள குடகு நாட்டில் உற்பத்தியாய் நமது கோயமுத்தூர் ஜில்லாவின் ஓரமாக 150 மைல் தூரம் இப்பெரிய நதி பாய்ந்து பலன் தரினும், அதனை இந்நாட்டு நதியென ஒருவரும் கூறுகின்றூர்களில்லை. ஆயின், திரிசிரபுரம், தஞ்சை, ஜில்லாவாசிகள், இக்காவிரியை, 'சோழர்தங்குலக்கோடி' என்று வாயாரப் புகழ்ந்து பேசுகின்றனர்.

வரநதியாகிய காவிரிக்கு மேற்பாலுள்ள மற்றொரு நதிக்கு "வானி" என்று பெயர். இது மலையாளம் சில்லாவிலுள்ள அத்தப்பாடிப் பள்ளத்தாக்கில் உற்பத்தியாகி அவிநாசி, கோபிசெட்டிபாளையம் தாலூகாக்களின் வழியாகப் பாய்ந்து நூற்றைந்து மைல் நீளம் கடந்து பவாநியின் சிவ தலத்துக்கு அருகிலுள்ள சங்கமுக ஈச்சுரர் திருக்கோயிலின் பிற்பாகத்தில் காவிரி நதியுடன் கலக்கின்றது.

## வானிநதியும்—அதன் பெயருண்மையும்.

வானி என்னும் பெயரையுடைய பவாநி நதி, காவிரி நதியுடன் கூடுகின்ற சங்கமுகத்துறையில் விளங்குவதனுல், இது, "திருவானிகூடல்" எனவும், "பவாநிகூடல்" எனவும் பெயர்களைப்பெற்றன. அண்ணாமலை ஸ்ரீ அருணகிரிநாதரும் தாம்பாடிய திருப்புகழில், இவ்விருநதிகளின் கரைகளிலுள்ள நண்ணூர்க்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கந்தக்கடவுளைத் "திருவாநிகூடற் பெருமாளே" என்று விதந்தோதியிருக்கின்றனர். இத்தலத்துக்கோயில் கல்வெட்டுக்களிலும் நதிகளின் சேர்க்கையைத் "திருவாநி கூடல்" என்றே வெட்

டப்பட்டுள்ளன. கொங்கு நாட்டுள்ள சிறப்புக்களை எடுத்து விளக்கும் கோங்கு மண்டல சதகத்தில், "வானி கூடல் திருநண்ணுவூர்' என்ற தலைப்பிலும்,

† காலி லரவ மிருசுட ரைப்பற்றுங் காலத்திலே
மேலுல கம்பெறு வோர்புனல் மூழ்க விரும்பதுவுங்
கோல மிகுந்தப வானியும் பொன்னியுங் கூடுதுறை
வாலிப காசிநண் ணுவூர் பயில்கொங்கு மண்டலமே."

என்று கூறப்பட்டிருக்கிறது.

மேலே குறித்த பவாநி, காவிரி என்கின்ற இருநதிகளுடன், பராசர முனிவரால் எடுக்கப்பெற்ற திருக்கோயிலிலிருந்து அந்தர்வாகினியாய் பெருகிவரும் அமுதநதியும் (அந்தர்வாகினி = மறைமுகமாய்) சேருவதால், இதற்கு முக்கூடல் அல்லது திரிவேணிச்சங்கமம் என்ற பெயரும் பயில்வதாயிற்றென்று "பவாநித் தலபுராணம்" கூறுகிறது. அது:—

"பொன்னியே! கங்கை யமுனையே! பவாநி
பொருவரும் பராசரன் வகுத்த
மின்னவி ரமுத நதியதே! வாணியல்லது
வேறல, விந்தத்
தன்னிகர் பிறிதில் நலந்திரி வேணி சங்கம
மாதலாற் றென்பாற்
கன்னிமா மதில் சூழ் காசினியின் மேலாய்க்
கவினுமிக் கடிநக ரன்றே."

என்பது.

---

† "பொன்னுலகத்தைப்பெற விரும்புகின்ற சிலர்கள், சூரிய சந்திர கிரகண காலங்களில் பவாநி நதி காவிரியுடன் கலக்குகிற தான கூடுதுறையில் முழுகுகிறார்கள். அந்த வாலிபகாசியான திருநண்ணுவூர் உள்ளது கொங்கு மண்டலம்," என்பது, பாட்டின் பொருள்.

பவாநி நதிக்கு "வானி" என்ற பெயர் வழங்குவதென்பதன் உண்மையை, அவிநாசித்தலபுராணத்தில், "குடகில் வருங்கா விரிபுகு வானிக் கோழுநாடு" என்னும் பாவடி உணர்த்துகின்றது.

இதுவேயன்றி, வானியாற்றின் இருபக்கத்திலுமுள்ள சில சிற்றூர்கள், வானி என்றே பெயராலேயே இன்றும் அழைக்கப்பட்டு வருகிறதென்பதை, மேவானி, கீவானி, அத்தாணி என்பனவற்றால் அறியலாகும். இதுவன்றி, காட்டாறு ஒன்றும், "சிறுவானி" என்று பெயர்பெற்று பல்லாயிரவர்கட்குப்பயன் தருகின்றது. அது அருந்துவதற்கு இன்பச்சுவையாய், ஆனந்தத்தை அளிப்பதாய், கோயமுத்தூருக்கு அடுத்துள்ள பேரூர் சிவத்தலத்துக்கு மேற்றிசையிலுள்ள வெள்ளியங்கிரியின் சிகரத்தினின்றும் பெருக்கெடுத்துப் பேராருய் விளங்குகிறது. "வானி" என்பதை "வாணி" எனத்திரித்து வழங்குவோர் மிகப்பலர். "வால்" என்ற முளையினின்றும் பிறந்த தூய தமிழ்ச்சொல், வானியாகும். இதனை வடசொல் ஆக்கல் அடாது.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருகிய 'பதிற்றுப்பத்து' என்னும் சங்க நூலுள் ஒன்பதாப்பத்தில் உள்ள 86-ஆம் பாடலில், பெருங்குன்றூர்க்கிழார் என்னும் புலவர் பெருமான், 'இளஞ்சேரல் இரும்பொறை' என்னும் சேர அரசனைப்பற்றி, "இளஞ்சேரல் இரும்பொறையை எல்லாரும் வெருவரச் செருக்களம் புலவக் கொன்றமர்க் கடந்த தடக்கைப் பொறையன் என்று சொல்லுகையாலே யான் அவனை வெப்பமுடையான் ஒரு மகனென்று கருதினேன்; அஃது இப்பொழுது கழிந்தது; அப்பொறையனு

கியபாடுநர் புரவலன், ஆடுநடை அண்ணல், யான் தன்னொடு கலந்திருந்த வழித் தன்னாட்டு வானி என்னும் யாற்று நீரினும் சாயலனாயிருந்தான்றானென்று" வரும் பழைய உரையையுடைய பாட்டில்,

"புனல்பாய் மகளி ராட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றுஞ்
சாந்துவரு வானி நீரினுந்
தீந்தண் சாயலன் மன்ற தானே."

என்ற அடிகளில் சேரவரசனுடைய திருமேனிக்கு வானி நீரை உவமைகூறினர் அப்புலவர். வானி, மென்மையான சாயலையும், தூய்மையான நீரையும் உடைமையால் இப்பெயர் பெற்றது போலும்.

வானி என்னும் ஆற்றின்பெயரை, செய்யுள் வழக்கிலேயன்றி உலக வழக்கிலும் மக்கள் மிகுதியாக உபயோகித்து வருகின்றனர்.

இனி "பவாநி" என்று வழங்கும் பெயரின் காரணம் யாதென ஆராய்வாம்:- 'தூர்வாசமுனிவர்,' சிவபெருமானை வழிபடுவதற்காகத் தவஞ்செய்தபொழுது, சிவபெருமானுக்குரிய ஆண்பாற்பெயராகிற "பவன்" (ப்ரதிவ்யோபவ:) என்பதற்கும்பொருந்தப் "பவாநி" என்னும் பெண்பாற்பெயரையுடைய அம்பிகையின் திருவருளால் இந்த பவாநி நதி பெருகிவந்தமையால் அப்பெயரை அதற்குவைத்து வழங்கினர். அது,

"அலம்புரி பவநீத் தோங்கு மருந்தவத் தூருவாச
னலம்புரி தவத்தால் வேத நாயகி யருளே நல்ல
சலம்பயி னதியாய்த் தன்பேர் தரித்திரு கரையுந்தூய
வலம்புரி யினங்கள் வீசி வருதிரைப் பவாநிக் கீழ்பால் (27)

என்ற பவாநி கூடற்புராணம் நைமிசாரண்யச் சருக்கம் 127-ஆம் கவியால் தெளிவாகிறது.

மேலே விளங்கிய விஷயத்தால், வானி என்ற பெயர், திருநணுவூர் என்னும் திருத்தலத்தில், காவிரியுடன் கலக்கும் நதியின் பேயர் என்றும், திரு என்பது தலத்திற்கு அடை மொழி என்றும், வானி என்பது மரூஉ மொழி என்றும் கொள்க.

நான்மாடக்கூடல், திருமுக்கூடல், நஞ்சுண்ட கூடல், அப்புக்கூடல், திருவேணி சங்கமம் என்ற பெயர்களில் கூடல்கள் பல விருக்கின்றன. தென்மதுரை நான்மாடக் கூடலுக்கு வானி கூடியதால் வந்த பெயர் அன்று. ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் விடுத்த மேகங்கள் நான்கு மாடங்களிலும் கூடியதால் வந்த பெயர். "திருவானி கூடல்" என்பது திருநணுவிலுள்ள மூன்று நதிகள் ஒருங்கு கூடியதால் எழுந்த பெயர். அதுவே பவாநிகூடலுமாய்த் தலத்திற்கும் பெயராயிற்று. இவ்வுண்மை, கோயில் கல்வெட்டுக்கள், தலபுராணம், சங்க நூல், உலக வழக்கு முதலியவற்ருல் உறுதிபெறுகின்றன.

## காயத்ரி படித்துறை.

முன்னரே விவரிக்கப்பட்ட காவிரி—பவாநி என்ற புண்ணிய நதிகளேயன்றி சுயம்புலிங்கமாக விளங்கும் ஸ்ரீ சங்கமேச்சுரப் பெருமான் திருக்கோயில் கொண் டருளும் தென்கிழக்குத்திசையில் அளவிடற்கரிய பெருமை வாய்ந்த காயத்ரி மந்திரமே ஓர் கற்சிலே வடிவாய்த் திருவுருக் கொண்டு காவிரிக்கரையின் மேற்குக்கரையில் கோயில்

கொண்டிருக்கிறது. தெளிவுற்ற மனதின்கண்ணே விளங்குவதாகிய சிவ வடிவத்தையொத்த அக்காயத்ரிச் சிலையின் திருவுருவத்தை, அங்குள்ள திருவேணி சங்கமத்தில் திருநீறணிந்து, உருத்திராக்கம்பூண்டு அமைதியாக ஓர் இடத்தில் அமர்ந்து, இருபத்துநான்கு எழுத்தாக விளங்குகின்ற மிகத் தூய்மையான காயத்திரி மகாமந்திரத்தை மெய்யன்புடன் செபஞ்செய்யின், அக்காயத்திரி மகாமந்திரத்தின் ஒவ்வோர் எழுத்துக்கும் கோடிபங்கு பலன் சித்திக்கும். பதினாயிரம் முறை உருச்செபித்தால், அட்டமாசித்திகளும் நமது கைவசமாகும் அம்மட்டோ! சீவன் முத்தராய்ச்சிறந்து புனிதமான அத்விதமுத்தியை அடைவதற்கு யாதொரு ஐயமும் இல்லை.

இக்காயத்ரிச்சிலைக்கு எதிரில் பெருக்கெடுத்தோடும் காவிரி நதியில் ஆங்காங்கு "காயத்ரி தீர்த்தம்", "சாவித்திரி தீர்த்தம்", சரசுவதி தீர்த்தம்" என்னும் மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. காயத்திரிச்சிலையின் ஆலயத்தையொட்டி ஆழமான ஓர் மடுவு இருக்கிறது. அதற்குக் "காயத்ரி மடு" என்னும் பெயர் வழங்கப்படுகிறது. இத்தீர்த்தங்களிலும், காயத்திரி மடுவிலும், மற்றும் ஆங்குள்ள தேவர்களால் எடுக்கப்பெற்ற தேவதீர்த்தத்திலும், திருமாலால் எடுக்கப்பெற்ற சக்கரதீர்த்தத்திலும், சூரியனால் எடுக்கப்பெற்ற §சூரிய தீர்த்தத்திலும், உரோமரிஷியால் தோண்டப்பெற்ற உரோமச

§ இத்தலத்திற்கு நேர் கிழக்கு சுமார் 2½ கல்லில் சேலம் செல்லும் கற்சாலைக்கு வடபுறம் கத்தாரி சாமியம்பாளையம் என்னும் சிறு குன்றில் வடபாலுள்ளதே சூரிய தீர்த்தம். இத்தீர்த்தத்தில் மூழ்குவதற்கு யாத்திரைவாசிகள் சிலர், மார்கழி மாதம் புனர்பூச நக்ஷத்திரத்திலும், வேறு விசேடகாலங்களிலும் செல்லுகின்றனர், விரிவைத்தலபுராணத்தில் கண்டு கொள்க.

தீர்த்தத்திலும், பக்திசிரத்தையுடன் மூழ்கி, பிரம விஷ்ணுக்களுக்கும் எட்டாத சிவபெருமானை வணங்கினால், கருக்குழியில் அவதிப்படும் கஷ்டம் நீங்கப்பெற்று, இருவினை நீக்கத்தையும் அடைந்து, திருப்பொலிய வாழ்வார்கள்.

இது, போதுமான அகலத்தையும் நீளத்தையும், மிக வசதியையும் உடையபடித்துறை. இறங்கிஸ்நானம் பண்ணுவதற்குக் கருங்கற்படிக்கட்டுகள் பசந்தாகப்போடப்பட்டிருக்கின்றன. படிக்கட்டுக்களுக்கு எதிரில் காவிரி சுமார் அரைமைல் அகலத்திற்கு சான்றோர் மனமெனத்தெளிந்த நீருடன் இருக்கிறது.

ஆடி—தை—புரட்டாசி மாதங்களில் வரும் விசேட அமாவாசை காலங்களிலும், மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, சங்கராந்தி புண்ணிய நாட்களிலும், கிரகண காலங்களிலும், காயத்ரிமடுவில் மூழ்கி அங்குள்ள படித்துறையில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ காயத்ரிலிங்கப்பெருமானைத் தரிசித்துப் பூசித்தவர்கள், பெரும் புண்ணியத்தைப் பெறுவரென்று தலபுராணம் சிறப்பித்துக் கூறுகின்றது. இந்த லிங்கத்தை, விசுவாமித்திர முனிவரால் கோயில்கொள்ள செய்யப்பெற்றதென்கின்றனர். ஆவுடையாருடன் கூடிய காயத்ரிலிங்கேச்சுரருக்கு வலது பக்கத்தில் யானைமுகப்பிள்ளையாரும் பற்பலவுருவங்களில் கற்சிலைகளில் நாகபாம்பு உருவங்களும், நந்தி, பெருச்சாளி வாகனங்களும் கோயில் கொண்டிருக்கின்றன. மூலத்தானம் விமான சிகரங்களுடன் விளங்குகிறது. தீர்த்தங்களில் மூழ்கி, ஜபம், தவம் செய்கின்றவர்களுக்கு நன்றாக வசதி செய்யப்பட்டிருக்கிறது. இங்குள்ள படித்துறையும், காயத்ரி சிலையும், கோயில் முதலியவைகளையும் இன்றைக்

குச்சுமார் 30, 35 ஆண்டுகளுக்கு முன்னே கோழிக்கோடு (கல்லிக்கோட்டை) மேன்மைதங்கிய "சாமரின்" என்ற சிற்றரசனல் ஜீர்ணேத்தாரணம் செய்யப்பெற்றது.

காயத்ரி படித்துறையில் பிராமண சந்நியாசிகளுக்கு மட்டும் தங்குவதற்கு ஒரு திருமடத்தை, கள்ளிப்பட்டி வேளாளப்பிரபு, ஸ்ரீமான். இராமசாமிக்கவுண்டர் அவர்கள் தருமத்திற்குக் கட்டிவைத்திருக்கின்றனர்.

## (1) திருத்தலத்தைத்தரிசித்துத் தீர்த்தங்களில் மூழ்கினேரும்—பேறுபெற்ரேர்களும்.

அங்கம் என்னும் நாட்டில் வாழ்ந்த "எக்கியசருமன்" என்னும் பெயருடைய அந்தணனது புதல்வனுகிய "தருமசன்மா" என்பவன், தருப்பைப்புல், *சமித்து, முதலியவை கொண்டுவரும்பொருட்டு ஓர் வனத்துக்குச்சிறுவர்களுடன் கூடிச்சென்றுன். அப்பொழுது அங்கு 'மாலுதானர்' என்னும் பெயருடைய மாமுனிவர் ஒருவர், புத்தொன்றில் அருந்தவம் செய்துகொண்டிருந்தார். அவர்மீது அச்சிறுவர்கள் குறும்பு காரணமாகக் கல்லையும், மண்ணையும் வாறி வீசியடித்தனர். அம்முனிவர், கோபம்மிகுந்து அச்சிறுவர்களைக் கல்லாகும்படி சபித்தினர். அச்சாபத்தால் தருமசன்மா கல்லாய் நின்றனன். அதனை அறிந்து மிக வருந்திய அவன் தந்தை எக்கியசன்மன், அக்கல்லுருவத்தை எடுத்துக்கொண்டு எல்லாப்பாவங்களையும் நசிக்கச்செய்யவல்ல பவாநித்தலத்திற்குவந்து பக்தி சிரத்தையுடன் திருவேணி சங்கமத்தில் முழுகிச் சங்கமேச்சுரரைத் தரிசித்தான். தீர்த்த விசேடத்தாலும், மூர்த்தி மகிமையாலும், முனிவர் சாபமாகிய

* சமித்து—வேள்வி விறகு, அல்லது உலர்ந்த குச்சிகள்.

கல்லுருநீங்கி முன்போலவே மனிததேகத்தைப் பெற்றுத் தனது நாட்டுக்குச்சென்றான்.

## (2) விசுவாமித்திரர் பிரம்மரிஷி பட்டம் பெற்றது.

இராஜ ரிஷி என்று யாவராலும் புகழ்பெற்ற விசுவாமித்திர முனிவர், வசிஷ்டமாமுனிவரால் "பிரம்மரிஷி" என்று ஒப்புக்கொள்ளாத காரணத்தால், பின்னர் இத்தலத்திற்கு எழுந்தருளி பெருந்தவஞ்செய்து அவ்வசிஷ்டமா முனிவரால் "பிரம்ம ரிஷிப்பட்டம்" வழங்கப்பெற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

## (3) தந்து வர்த்தன சோழன், புத்திரப் பேறு பெற்றது.

சோற்றுவளம் நிரம்பிய சோழநாட்டை அரசுசெய்து வந்த "தந்துவர்த்தன சோழன்" என்பவன், புத்திரப்பேறு இல்லாது பெரிதும் வருந்தினன். அப்பொழுது ஆங்கு எழுந்தருளிய "சங்குகன்னர்" என்ற பெரியார், பவாநித் திருத்தலத்தின் பெருமையையும், தீர்த்தங்களின் விசேடங்களையும் சிறப்பாய் எடுத்துக்கூறினர். அது கேட்டு மிக வியந்த சோழன், இத்தலத்திற்குவந்து புண்ணிய தீர்த்தங்களில் நீராடி மகிமைசிறந்த மூர்த்தியைத்தரிசித்து ஆலயத்தை வலம் வருகையில், தலவிருட்சமாகிய இலந்தை மரத்தினின்றும் பழுத்துச் சுவைமுதிர்ந்த நறுங்கனியொன்று தன் எதிரில்விழ, அதனை ஆவலுடன் எடுத்து மிக மகிழ்ச்சியுடன் தன் மனைவிக்குக்கொடுத்தான். அவள் அதனை அன்புடன் ஏற்று இன்புறப்புசித்தாள். கனியின் நலத்தால் கருப்பமுற்று ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்து அவனுக்குக் "குலவர்த்தனன்" என்று பெயரிட்டுக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

## (4) மருத்தன் என்ற அசுரன் வேண்டுகோளால், மகாதேவர் 'மருத்துவலிங்கம்' என்ற பெயர் கொண்டது.

மருத்தன் என்ற கொடியதோர் அசுரன், தேவர் முனிவராதியோர்க்குப் பல பெருந்துன்பங்கள் செய்துவந்தான். அவற்றைப்பொறுத அவர்கள், எல்லாம்வல்ல இறைவராகிய சிவபெருமானிடம் முறையிட்டனர். திருவுளம் இரங்கிய சிவபெருமான், உக்கிரவடிவந்தாங்கி மாபாதகனுகிய அம்மருத்தனைக்கொன்றனர். அவ்வரக்கன் உயிர் விடும்போது, திங்கள் சூடியதேவதேவனை, தன்பெயரைத் தரித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அருள் மூர்த்தியாகிய இறைவர், அவன் வேண்டுகோளின்படி, "மருத்துவலிங்கம்" என்று பெயர் புனைந்தனர். அதனுல், இத்தலக் கடவுளுக்கு "மருத்துவலிங்கம்" என்றதொரு பெயர் வழங்கப்பட்டுவருகிறது.

## (5) ஊராச்சி மலைக்கோட்டை *வேதகிரி என்று பெயர் பெற்றது.

"மதுகைடவர்" என்ற அவுணர்கள், நான்குவேதங்களை அபகரித்துக்கொண்டு பாதலத்திற்சென்று ஒளித்தனர். அவ்அரக்கர்களை, காத்தற் கடவுளாகிய விஷ்ணு

---

* இம்மலைமீதுள்ள சிவபெருமானுக்கு வேதகிரீச்சுரர் என்றும், தேவிக்கு வேதநாயகியென்றும், மலைக்கு வேதகிரி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஊராச்சிக்கோட்டை என்று வழங்கப்படும் இம்மலை பவானிக்கு வடக்கில் இரண்டரைக்கல் தூரத்தில் இருக்கிறது. செங்குத்தான இக்குன்றின்மீது திருமாலுக்கும் சிறியதொரு கோயில் இருக்கிறது. இவர் பெயர் வேதநாராயணப்பெருமாள் என்பது. இதன் உயரம் 1437 அடி. இம்மலையின் அடிவாரத்தில் சிறியதொரு கோட்டையிருந்தது. இப்பொழுது அழிந்துவிட்டது.

தேவர், மீனுருக்கொண்டு, கடலின் அடித்தலத்திற்குச்சென்று அவர்களைக் கொன்று, களவாடிக் கொணர்ந்திருந்த வேதங்களை எடுத்து வந்தனர். வேதங்கள், அரக்கர்கள் ஆதீனத்தில் இருந்ததனால், அவைகள் நிலைமாறி மாறுபட்டிருந்தன. அவற்றைப் பண்டுபோல் ஒழுங்குசெய்து தரும்படி தேவர்கள் திருமாலை வேண்டினர். அவர், வேதவியாசர் வடிவந் தாங்கி திருநணுவென்னும் இத்தலத்திற்கு எழுந்தருளி, இதற்கு வடக்கில் 2½ கல் தூரத்திலுள்ள ஊராச்சிக்கோட்டை மலையின்மீதிருந்து அவ்வேதங்களை முன் போலவே முறைப்படுத்திக்கொடுத்தனர். செங்கண்மாலாகிய லட்சுமீகாந்தன், அம்மலையின் மீது இருந்து வேதங்களைச்சிக்கறுத்த காரணம்பற்றி அது "வேதகிரி" என்ற பெயரைப்பெற்றது.

## (6) பங்கமுற்ற படைப்புத்தொழிலைப் பிரமன் பண்டுபோற் பெற்றது.

சதுர்மறையோனாகிய நான்முகன், தன்கைத்திறம் விளங்கப்படைத்த பேரழகுமிக்க திலோத்தமையை, காமங்கதுவி மோகங்கொண்ட காரணத்தால், சிருஷ்டித்தலாகிய தொழில் கைகூடாமல் தடைபட்டது. வருத்தமுற்ற வேதா, பவாநித் தலத்திற்கு எழுந்தருளி, முனிவரால் பஞ்சாட்சர மந்திரோபதேசஞ் செய்யப்பெற்று, சங்கமேச்சுரரைப் பேரன்புடன் பூசித்தனர். அத்திருப்பூசைக்குத் திருவுளமகிழ்ந்த அச்சிவனார், அச்சிவபஞ்சாட்சர மூலமந்திரத்தைப் பிரமனுக்குத்தாமே உபதேசித்து அருளினர். அதனால், புதல்வியைக்காதலித்த பாவம் நீங்கப்பெற்று, பழைமைபோல் பிரமன் படைப்புத் தொழில் கைவரப் பெற்றான்.

## (7) கொலைபுரிந்துகொண்ட இருவர், உயர்பிறவி பெற்று உய்ந்தது.

வடக்கிலுள்ள கலிங்க நாட்டில் வாழ்ந்த "இலிங்கி" "விருடாபி" என்ற இருவர், திருநீறு, உருத்திராக்கமாலைகள் அணிந்து, சிவநேசர்களாக விளங்கியிருந்தனர். அவ்விருவரும் ஒரு நாள் மலர்மணம் நிரம்பிய பூங்காவொன்றில் வீற்று உல்லாசமாக உரையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் பெண்புருவை ஆண்புரு புணருவதைக்கண்டு இலிங்கி என்பவன் இகழ்ந்து பேசினன். அங்ஙனம் பேசியதை விருடாபி தன்னைக்குறித்தே அவன் இகழ்ந்ததாக எண்ணிக்கொண்டு, ஒருவருக்கொருவர் பழிபல பேசி பலமாக அடித்துக்கொண்டு உயிரிழந்தனர். அவர்கள் சிவநேசர்களாய், சிவச்சின்னங்கள் அணிந்திருந்ததனுலும், சிவசரிதம் கேட்ட புண்ணியத்தினுலும் அக்கலிங்க நாட்டு அரசனுக்கும், அமைச்சனுக்கும் அருமைப் புதல்வர்களாய்த் தோன்றிப் "பாராவதன்" "வலிமுகன்" என்ற பெயர்களைப் புனைந்துகொண்டு திருத்தலயாத்திரையாக இப்புண்ணியப் பதியை அடைந்து, அபயவரதனுகிய சங்கமேச்சுரரைப் பணிந்து, பெறுதற்கரிய பேரின்ப வீட்டைப்பெற்றனர்.

## (8) பசுவைக்கொன்ற அரசன் பாவம் நீங்கப் பவாநியடைந்தது.

கலிங்கதேயத்தின் அரசனுகிய "விஸ்வதாமன்" என்பவன், காட்டில் வனவிலங்குகளை வேட்டையாடிக்கொண்டு வருகையில், தூரத்தில் தோன்றிய பசுமாட்டை, மான் என்று நினைத்து அம்பை எய்து கொன்றனன். அருகில் சென்று பார்த்தபோது பசுவென்று அறிந்து, மிக வருந்

தினன். அவனது நல்வினையினல், தவத்தால் மிக்குயர்ந்த கண்ணுவ முனிவர், அகஸ்மாத்தாக அங்கே தோன்றினர். அவர், அரசனது வருத்தமுணர்ந்து, பவாநித்தலத்து மகிமையையும், காயத்ரிச்சிலையையும், தீர்த்தச் சிறப்பையும் பெருமைப்பட எடுத்தோதினர். அவற்றை கேட்டுமகிழ்ந்த அரசன், கணமும் தாழாமல் கொங்கு நாட்டையடைந்து காயத்ரிமடுவில் முழுகிக் காயத்ரிச் சிலையை வணங்கி அதன் எதிரிலிருந்து பஞ்சாட்சரத்தைப்பன்னூறுதரம் ஜபித்தனன். அச்சபத்தின் விசேடத்தால், பசுவைக்கொன்ற பாவம் நீங்கப்பெற்று, அச்சிவதலத்துச் சிவபெருமானுக்கு சிவ திருப்பணிகள் பல செய்து, தன்னூருக்குத் திரும்பி அரசுகைக்கொண்டு அகமகிழ்ந்தனன்.

## (9) தீயகுணமுடைய "சங்கோசன் என்னும் புலையன் சிவகதிபெற்றது.

வடநாட்டின் கண்ணுள்ள "அவந்தி" என்னும் ஊரினனை "சங்கோசன்" என்னும் பெயருடைய புலையன், கொடுமையான குணத்தையும், இழிந்த நடையையும் கைக்கொண்டிருந்தான். எனினும், கல்வியறிவும், சிவபுண்ணியத்தில் விருப்பமும் உடையவனுயிருந்தான். இவற்றுல், அவன் சிவபெருமான் சிறப்பையும், பவாநித்தலத்தின் பெருமை விளக்கும் புராணத்தையும் அறிஞர் ஒருவரால் அன்புடன் உரைக்கக்கேட்டு அளவற்ற ஆனந்தத்தை அடைந்து, அத்தலத்தின்மீதே பேரன்புகொண்டிருந்தான். என்றுலும், இயற்கையான தனது தீயபழக்கத்தைவிடாமல் கைக்கொண்டிருந்தனன். அதனுல், அவன் ஒருநாள், இரவு அரசன் அரண்மனையுட் புகுந்து களவு செய்தான். காவ

லாளர் விழித்துக் கையும், களவுமாய்ப் பிடித்து அரசன் முன்னே விடுத்தனர். அரசன் சினந்து அவனைச்சிரச்சேதம் செய்யும்படி உத்திரவு செய்தான். கொலையாளிகள் அக் கள்வனைக் கொலைக்களத்திற்கு அழைத்துச்சென்று கூர்மையுடைய வாளையுருவி ஓங்கினர். அப்பொழுது அவன், மனம், வாக்கு, காயம் ஆகியவைகள் ஒன்றுபட்ட நிலையிலிருந்து பவாநிப்பரமனை உள்ளத்தில் ஊன்ற நினைத்து, 'இறைவனே! என்னை, இதுசமயம் ஆட்கொண்டருளவேண்டுமென்று வேண்டினன்.' ஓங்கிய உடைவாள் அவனது சிரத்தை வீழ்த்தாமல், அப்புலையனது கழுத்தில் மலர் மாலையாக விழ்ந்தது. அதுகண்ட அதிசயித்து, அரசனுக்கு அறிவித்தனர். அரசன் கொலைஞர் "சிவகருணைக்குரிய சீலன்" என்று அவனைப் பாராட்டி வழிவிடுத்தனன்.

## (10) "பிங்கலை" என்னும் கணிகைமாது, புருவுருப்பெற்றுப்பரகதி அடைந்தது.

திருநணுவூர் என்னும் பவாநித்தலத்தில் வசித்துவந்த "பிங்கலை" என்னும் அழகிய கணிகைமாது, நாளொன்றுக்கு நூறு பொன் தருபவரையே தான் கூடுவதென்று உறுதி செய்துகொண்டு வாழ்ந்து வந்தாள். வியாபார நிமித்தம் அங்குவந்த 'சுனந்தன்' என்னும் பெயருடைய வியாபாரி கட்டழகுமிகுந்த அம்மோகனங்கியைக்கண்டு காதல் கொண்டு, தன் வசத்திலிருந்த தொண்ணூறு பொன்னுடன் சென்று இப்பொன்களைப் பெற்றுக்கொண்டு, தன்னைக்கூட வேண்டுமென்று கேட்டான். அக்கணிகை, எஞ்சிய பத்துப் பொன்னையும் சேர்த்துக்கொடுத்தாலன்றி, உம்மைக் கூடேன் என்றனள். அவ்வணிகன், அப்பத்துப் பொன்

னுக்காக அன்றிரவெல்லாம் அலைந்து தேடியும் அகப்படாமல், விடிந்ததும் நினைத்தவரம் அருளும் திரிவேணி சங்கமத்துக்கூடலில் சென்று, மறுபிறவியிலேனும் அவள் தனக்கு மனைவியாகவேண்டுமென்று கூறி பெருக்கெடுத்தோடும் பிரவாகத்தில் குதித்துப் பிராணனை விட்டான். அஃதுணர்ந்த அக்கன்னிகையும், அவ்வணிகனைப்போல் கூறுமல், நான், 'அவனுக்கு உடன்பிறந்த சகோதரியாகப் பிறக்கவேண்டுமென்று' பிரார்த்தித்து நதியில் குதித்து உயிர் நீங்கினுள். மறுபிறப்பில் அவ்விருவர் எண்ணமும் தவறுமல் நிறைவேறும்பொருட்டு அவர்கள் பவாநித்தலத்தில் ஒரு தாயிடத்தில் இரு புருக்களாகப்பிறந்து பலகாலம் ஒன்றுகக் கூடி இன்புற்றிருந்து பின்னர் பரகதியடைந்தனர்.

## கோட்டையும் — அதன்வலிமை, அரண்— அமைத்தோர் வரலாறு முதலியனவும்.

கோயமுததூர் ஜில்லாவில் மொத்தம் மண்கோட்டைகள்மட்டும் இருபத்தைந்து இருக்கின்றன. அவைகள் காவேரிபுரம், சாம்பள்ளி, அந்தியூர், பவாநி, பெருந்துறை, விஜயமங்கலம், வெள்ளாதி, பொன்னுபுரம், சிங்காநல்லூர், அன்னியூர், ஊராச்சிமலை, உடுமலைப்பேட்டை, (சக்கரகிரி) கோட்டைப் பாளையம், (கோயில் பாளையம்) கருடன் கோட்டை, மாச்சநாய்க்கன்பாளையம், கணியூர், கொழுமம், (குழுமூர்) அட்டில்துறை, கஜ்ஜ ஹட்டி, சத்நியமங்கலம், குத்தியாலத்தூர், தாராபுரம், தலைமலை, காணிச்சித்தன்கோட்டை, ஈரோடை, (ஈரோடு) கோயமுத்தூர் என்பன. இவைகள், இப்பொழுது பெரும்பகுதிகள் அழிந்து சில விடங்களில் சில அடையாளங்கள் மட்டும் இருக்கின்றன.

இவற்றில், காவிரி, பவாநி நதிகள் கூடும் கரைகளின் நடுவி லிருக்கும் பவாநிக்கோட்டையும் ஒன்று. இக்கோட்டை முற்றும் அழிந்ததெனினும், ஒருபுறத்தில்மட்டும் ஜீர்ண மடைந்த மதிற்சுவரும், மண்மேடும் இருக்கின்றன. இம் மண்மேடும், மதிற்சுவரும் பல்லாண்டுகளாகப்பெய்யும் மழைக்கும், பெருவெள்ளப்பெருக்கிற்கும் ஒரு சிறிதும் அசையாமல், வலிய பாறைபோல் உறுதியாயிருக்கின்றன. அழிந்தன போக எஞ்சிய சிறியதொருமண்மேடும், மதிற் சுவரும் இவ்வளவு பலங்கொண்டு அழிவடையாமல் நிற்கு மாயின், பண்டைய கோட்டை எவ்வளவு பலமுடையதா யிருத்தல்வேண்டுமெனக் கருதுதல் தகும். இக்கோட் டையைக் கட்டுவதற்குத் தேர்ந்த நல்இடத்தையும், அந்த இடத்தில் வலிமைபெறக் கட்டிய அரசனுடைய அறிவின் நுட்பத்தையும் கவனிப்பவர்கள், அவ்வரசனது சிறந்த அறிவு, ஆழ்ந்த ஆலோசனை, நுனித்தறியும் மதி நுட்பம், தேர்ந்த செயல், கலைப்பயிற்சி முதலியன இவ்வளவெனத் தெரிந்து மகிழ்வர். ஒருபுறம் அலையெறிந்து இருகரையும் புரளப்பெருக்கெடுத்துவரும் பேராறுகிய காவிரியும், மற் றொருபுறம் அகன்ற கரைகளில் அலைகள்மோதி ஆரவாரத் துடன் விரைந்த கதியில் பலமான வேகத்தில் பாய்ந்துவரும் பவாநியாறும், ஒன்று சேரும் சங்கமத்துறையின் இடையில் வெள்ளப்பெருக்கின் அபாயத்தைப் பொருட்படுத்தாமல் மண் கோட்டையை மாண்புடன் கட்டத்துணிந்த அருஞ் செயல் பெரிதும் பாராட்டுதற்குரியதே. அத்தமிழரசன், காவிரி, பவாநி என்னும் இருபேராறுகள் தனது கோட் டைக்கு நீரரணாக நின்று துணை செய்யுமென்று நினைத்துக் கட்டியிருக்கவேண்டும். அவன் எண்ணிய எண்ணம் சரியே என்பதற்கு இதுவரையும் எத்தகைய பெருவெள்ள

மும், அக்கோட்டையை அழிவு படுத்தாமல் பாதுகாப்பாக இருந்து வருவதே போதிய சான்றும். காலமென்னும் மோசக்காரனது விபரீதச் செயலுக்கு எவையும் அழிந்தொழிவது பதிவானதால், அவ்வகையில் பவானிக்கோட்டையும் அழிந்தது.

இப்பொழுது அழிவுற்ற நிலையில் காவிரி நதியின் மேற்குக்கரையின் மேட்டில் ஸ்ரீ சங்கமேச்சுரர் திருவாலயத்திற்கு முன், கோட்டைக் காவல்வீரனுக விளங்கும் அநுமார் கோவிலிலிருந்து, கூடுதுறைக் கல்மண்டபம் வரையிலும் நீண்டு காணும், கோட்டை மதிற்சுவற்றின் அகலம் மட்டும் 13 முழம் என்ருல், அம்மண்கோட்டை எவ்வளவு வலிமையுடையதாய் இருத்தல்வேண்டுமென எண்ண இடந்தருகிறது.

மற்ருென்றையும் கவனித்தல் வேண்டும். பகைவர்கள் பெரும் படகுகளைக்கொண்டன்றி மூன்று புறங்களிலும் கோட்டையை அணுகமுடியாது. ஒருகால், பெரும்படகுகளால் அணுகுவார்களாயின், அப்பகைவர் படகுகளை வெகு எளிதாக நதியில் கவிழ்த்துவிட முடியும். ஆனதால், அம்முயற்சியும் பயன்றரமாட்டா. பின்ஞெரு புறத்திலோ, பலமான மதிலும், கொத்தளமும், அமைக்கப்பட்டிருந்தன. அதனாலும் கோட்டையை எளிதாக எய்த இயலாது. அல்லாமல், கோட்டை அமைக்கப்பெற்றிருந்த மேட்டுப்பாங்கான நிலத்தில் எத்தகைய பெருவெள்ளமும் எளிதில் எவ்வகை அழிவும் செய்யமுடியாது. கடந்த கி. பி. 1924-ஆம் ஆண்டு அதாவது இன்றைக்குப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் இருநதிகளிலும் பெருகிய மாபெருவெள்ளத்தினல், பவானிப்பதியில் ஐந்நூறு வீடுகள்வரை அழிவுற்றும், நிலப்

பரப்புக்கள் நிலைகுலைந்துபோயிருந்தும், கோட்டையிருந்த இடமும், அதன்நடுவிலுள்ள ஆலயங்களும் அவ்வெள்ளத்தினால் சிறிதும் நிலைகுலையாமல் அன்றிருந்தவாறே அசையாமல் இருக்கின்றன. இவற்றால், கோட்டை கட்டிய நமது தமிழகப்பழவரசனது புத்திசாதுரியத்தையும், செய்வன திருந்தச்செய்யும் செயலையும் நமக்கு எவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இத்தகைய கோட்டையையும் அதிலுள்ள சிவாலயங்களையும் சிறக்கக்கட்டிய திருமிகு செல்வர், தொண்டை மண்டலக்கொண்டை கட்டி வேளாளர் திருமரபினர். இவரது சிறந்த வரலாறு, பாவானித் திருத்தலவரலாற்றிலேயன்றி, திருச்செங்கோடு, தாரமங்கலம், அமரகுந்தி, ஓமலூர், அந்தியூர், குளத்தூர், காவேரிபுரம், தென்கரை, ஆத்தூர், தலைவாசல், இருக்குவேளூர் (பேளூர்) முதலிய ஊர்களின் வரலாறுகளிலும் முதன்மையானவிடத்தில் இடம் பெறுவதற்குத்தகுதியுடையது. ஆனதால், சிவச்செல்வரும், தீரமிகு சேவகரும், எழுபத்திரண்டுபாளையகாரர்களில் ஒருவரும், புலவர்போற்றும் புகழாளருமாகிய இந்நல்லாரதுவரலாற்றைச் சுருக்கமாக இதன்கீழ் எழுதி, அதன் பின்னரே அவரால் பவானித்திருத்தலத்தில் கட்டுவிக்கப்பெற்ற சிவலாலயங்களைப்பற்றி எழுதுவது முறையெனத் தோன்றியதால், அதன்படி வரையத்துணிந்தேன்.

### (1) கட்டி நாடு.

இந்நாடு, வடகொங்கின் எல்லையிலுள்ளது. திருமிகு முதலியாரவர்கள் அரசு செய்யும்போது அவரது அதிகாரத்தில், மேல் கொங்கின் கீழ்ப்பாகமும் அடங்கியிருந்தது.

## கட்டி நாட்டின் எல்லை.

கீழே குறிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்கு உட்பட்ட நாடானது சிற்சில சிறு நாடுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது என்று ஆங்காங்கே கிடைத்த கல்வெட்டுச் சாசனங்களால் அறியக்கிடக்கின்றது. அவைகளாவன:—

வடக்கே:– தகடூர் (தருமபுரி) அதிகமான் நாடு. கிழக்கே தொப்பூர், பொம்மிடி, செங்கம், மஞ்சவாடி, மும்முடித்தலைவாசல்; தெற்கே இராசிபுரநாடு. (இராமச்சந்திர நாய்க்கன் ஆண்டநாடு) மேற்கே வானி நதி, பெருந்துறை ஈரோடை (ஈரோடு) தாராபுரம்.

வடகரை நாடு:– காவேரிபுரம், குளத்தூர், அந்தியூர் முதலியன. வடகரை நாடு என்றால், எதற்கு வடகரை? வானியாற்றின் வடகரை என்று கொள்க. நங்கவள்ளிநாடு:- நங்கவள்ளி, வனவாசி, மேலைச்சேரி முதலியன. பக்கநாடு:- ஜலகண்டபுரம், இருப்பாளி முதலியன. பெரும்பாலை நாடு:- பாலை மலையைச்சேர்ந்த ஊர்கள். சேலம் நாடு:- ஓமலூர் நாடு, ஆத்தூர் நாடு, செங்குன்றூர் நாடு, குன்றத்தூர் நாடு முதலியன. குன்றத்தூர் நாட்டில் செங்ககிரி, மோரூர், போகூர் முதலியன அடங்கும்.

மேலே கூறிய நாடுகள் எல்லாம் கட்டி முதலியார்களுடைய அரசுக்குக் கீழ்ப்பட்டவை.

## (2) கட்டிநாடு ஏற்படக்காரணம்.

கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் தமிழ் நாடு, உள்நாட்டுச் சண்டைகளாலும், மேலைச் சாளுக்கியர், களப்பிரர், ஆந்திரர் முதலியோர்களுடைய படையெடுப்புக்களாலும் அலைப்

புண்டு இருந்தது. சோழர்கள் கி. பி. 3-ஆம் நூற்றுண்டில் முதல் கி. பி. 9-ஆம் நூற்றுண்டுவரை வலி குறைந்து, இருந்த இடம் தெரியாமல் இருந்து கி. பி. 880ல் நடந்த புறம்பயம் சண்டையில் வெற்றிபெற்றுத் தலைதூக்கினர்கள். புறம்பயம் சண்டையில் வெற்றிபெற்றவன் சோழன் முதலாம் ஆதித்தன் என்பான். இவனுக்குத் துணையாயிருந்த பாண்டியன் வரகுணன் III (மாரன் சடையவர்மன் சேகரன்) என்பவன். சேரன், தாணு இரவியின் மகன் கோங்கு நாட்டை அப்போது அரசாண்டுகொண்டிருந்த கங்க வமிசத்தைச் சேர்ந்த முதலாம் பிரிதிவிபதி என்பவன், மூன்றும் வரகுண பாண்டியனுல் புறம்பயம் சண்டையில் கி, பி. 880-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டான். கொங்கு நாடு பூராவும் முடிமன்னர்கள் சேர–சோழ–பாண்டியர்களுக்குள் ஆயிற்று. கொங்கு நாடு முடிமன்னர்கள் கைக்கு வந்ததும், வடநாட்டுப்படையெடுப்பினின்றும் அதனைக்காப்பாற்றத் தகுந்த ஏற்பாடுகள் செய்யலாயினர்.

வடக்கே இருந்து கொங்கு நாட்டிற்குவர சத்திய மங்கலத்துக்கு அருகிலுள்ள தலைமலை, காவேரிபுரம், தோப்பூர், பொம்மிடி முதலிய கணவாய்கள் வழியாகத்தான் வரவேண்டும்.

தொப்பூருக்கு வடக்கேயுள்ள கொங்கு நாட்டின் பகுதியாகத் தகடூரை அக்காலத்தில் அதிகமான் நெடுமான் அஞ்சியின் வமிசத்தவனுகிய மகேந்திரன் காவல்புரிந்து கொண்டிருந்தான். தகடூருக்குக்கிழக்கேயுள்ள தொண்டை நாட்டின் வடபகுதியாகிய வாணகப்பாடியை மாபலி

வாணர்கள் காவல் புரிந்தார்கள். ஆதலின், காவல் இல்லாமல் இருந்த பாகம் இப்போது பவானி தாலூகா என்று சொல்லப்பட்ட நிலப்பரப்பும், ஓமலூர் தாலூகா என்று சொல்லப்பட்ட நிலப்பரப்புமாம்.

இந்நிலப்பரப்பைப் பாதுகாக்க அக்காலத்தில் சிறந்த போர்வீரராகவும், வள்ளலாகவும், செந்தமிழ்க்குரிய சீலராகவும், தொண்டை நாட்டு வேளாளராகவும், சிவபத்தி அடியார் பத்திகளில் சிறந்தவராகவும், மூவேந்தருக்கும் நண்பராகவும் உள்ள **கட்டிமுதலியார்** என்பவரை, மூவரசர்களும் **மும்முடி** என்ற பட்டத்தைக் கொடுத்துக் குறுநில மன்னராக ஆளும்படி செய்தார்கள்.

இவர் மூவருக்கும் வேண்டியவர் என்பதனைத் தம்முடைய கோடியுடன், வில், புலி, மீன் குறிகளையும் இணைத்து வந்ததே விளக்கும். இவருக்குச் **சதுரங்கக்கோடி**. இவர் சதுரங்கம் விளையாடுவதில் இணையற்றவர். அம்மாதிரியே சதுரங்க சேனைகளை வியூகப்படுத்துவதிலும், சமயத்துக்கேற்றவாறு அணிவகுப்பதிலும், எதிரிகளை முறியடித்து வெற்றிபெறுவதிலும் ஈடு வகுப்பு இல்லாதவர். இதனை:—

"சுற்றூர் சதுரங்கம், வில்கயல் வேங்கைதொடர் கொடிகள்
மற்றூர்க் கிலையெனக் கொள் கட்டியும் கொங்குமண்டலமே."

என்னும் கொங்கு மண்டலச்செய்யுள் வலியுறுத்தும்.

மும்முடிக்கட்டி முதலியார் பரம்பரையார் கட்டிநாடு என்று சொல்லப்பட்ட மேற்கூறிய நிலப்பரப்பை கி. பி. 880 முதல் கி. பி. 1642 வரை அரசாண்டதாகவும், பிறகு மேற்படி கட்டிநாடு மைசூர் அரசாங்கத்தோடு இணைக்கப்பட்டதாகவும் சரித்திரம் கூறுகிறது.

## (3) கட்டிமுதலியார் பரம்பரை வரலாறு.

கட்டிமுதலியார் பரம்பரையில் பேர் பெற்றவர்கள் பலர். சங்க நூல்களிலும், கல்வெட்டுச் சாசனங்களிலும் அடியிற்கண்ட பெயர்கள் அடிபடுகின்றன. கி. பி. 880 முதல் கி. பி. 1672 வரை சுமார் 800 வருடங்கள் இப்பரம்பரையார் அரசாண்டார்கள். வரலாற்று நூல் கணக்குப்படி சராசரி ஒரு தலைமுறைக்கு 20 வருடங்கள் கணக்கிட்டாலும், சுமார் 40 பேர் அரசாண்டு இருக்கவேண்டும். இத்தொகையில் புகழ்வாய்ந்தவர்கள் பெயர்களே இலக்கியங்களிலும், சாசனங்களிலும் அடிபடுகின்றன. அப்பெயர்கள்:—

மும்முடிகட்டி, சீயாலகட்டி, வணங்காமுடிகட்டி, இளமன்கட்டி, கங்கன்கட்டி, பல்வேற்கட்டி, வேம்பன் கட்டி, இம்முடிகட்டி என்பன.

இப்பெயர்களைத் தாங்கினவர்கள் அவ்வமிசத்தில் பல பேர்கள் இருந்ததாகத் தெரிகிறது.

கட்டி என்பது வம்சத்தின்பெயர். ஏனென்றால், கட்டி முதலியார் என்பவர் தொண்டை நாட்டிலிருந்து வந்து தாரமங்கலத்தில் அரசு செய்து, மும்முடி என்ற பட்டம் பெற்று, பல கோட்டைகளையும், கோயில்களையும், ஏரிகளையும் கட்டி, சிறும்சிறப்பும் எய்தி வாழ்ந்தவர். ஆகையால், அவர் பெயரே அவருடைய பரம்பரைக்கு ஆயிற்று. தொண்டைமண்டலக் கொண்டைகட்டி வேளாளருக்குள் இம்மாதிரியே கோத்திரங்கள் (வமிசங்கள்) ஏற்பட்டுள்ளதை ஏகம்பவாணன் காலம் முதற்கொண்டு

வழங்கிவரும் வாணர்பரம்பரையையும், செய்யாற்றுவென்ருன் பரம்பரையையும், சேக்கிழார் பரம்பரையையும் நோக்க அறியலாம்.

கட்டி முதலியார்கள் பரம்பரையார் தாரமங்கலத்துக்கு அருகாமையில் இருக்கும் அமரகுந்தி என்னும் இடத்தில் அரண்மனை கட்டி வசித்துக்கொண்டு, தாரமங்கலத்தில் அரசாங்கக்காரியங்களை நடத்திவந்தார்கள். அமரகுந்தியில் பழய அரண்மனைச் சின்னங்கள் இருப்பதை அங்குச் செல்பவர் நேரே பார்க்கலாம்.

தாரமங்கலத்தில் சிற்பத்திறம் விளங்கக் கைலாசநாதர் கோவிலைக் கட்டியவர்கள், மூவர். மும்முடிக்கட்டி முதலியார் ஆரம்பித்துவிட, அதனை அவர் மகன் சீயாலக்கட்டி முதலியார் தொடர்ந்து வேலை செய்ய, அவர் காலத்திலும் வேலை முடியாமல், அவர் மகன் வணங்காமுடிக்கட்டி முதலியார் என்பவர் முடித்ததாகச் சாசனங்கள் கூறு கின்றன.

தாரமங்கலம் கோவிலில் மும்முடிக்கட்டி முதலியார் உருவமும், அவர் மனைவியார் உருவமும், செதுக்கப் பட்டிருக்கின்றன.

கட்டி முதலியார்களுடைய பராக்கிரமத்தாலேதான் வடகொங்கு படை எடுப்புக்களில் துன்பம் அதிகமில்லாமல் தப்பித்துக்கொண்டு வந்ததென்று சொல்லலாம்.

## (4) கோட்டைகள், ஏரிகள் ஆலயங்கள் முதலியன.

கட்டிமுதலியார்கள் நாட்டுப்பாது காப்புக்காக பல மண்கோட்டைகளை முக்கியமான இடங்களில் கட்டினர் கள். அவைகள்:—

(1) தாரமங்கலம். (2) அமரகுந்தி. (3) ஓமலூர். (4) அந்தியூர். (5) குளத்தூர். (6) காவேரிபுரம். (7) பவானி, (8) தேன்கரை. (9) ஆத்தூர். (10) தலைவாசல். (11) இருக்குவேளூர் (பேளூர்) என்னும் ஊர்கள்.

இக்கோட்டைகளைக் கட்டியபோதெல்லாம் கோவில்களைக்கட்டிய பின்னரே கோட்டைகளைக் கட்டியுள்ளார்கள். இதனாலேயே இப்பரம்பரையாருடைய சிவபத்தி எத்திறத்தன என விளங்கும். தங்களுடைய கடமையைச் செய்யும்போது சிவபெருமானை மறப்பதில்லை. அக்கோவில்களை ஏதோ கட்டினார்கள் என்ற பெருமைக்காகக் கட்டவில்லை. எக்காலத்திலும் யாராலும் கட்ட முடியாத சிற்பத்திறம் வாய்க்கப்பெற்றதாய்க் கட்டியிருக்கிறார்கள்.

அந்தியூர்க் கோட்டையில் உள்ள கோவிலில் இருக்கும் தலவிநாயகருக்குக் "கட்டி விநாயகர்" என்று பெயர். மும்முடிக்கட்டி முதன்முதல், அந்தியூர்க் கோட்டையைத்தான் ஆரம்பித்துக்கட்டி முடித்துவிட்டுப் பின், ஏனைய கோட்டைகளைக் கட்டினார் என்று தெரிகிறது. ஆதலால், முதலில் தாபித்த விநாயகருக்குத் தம் பெயரையே வைத்துத் தம்முடைய காரியங்களுக்கு இடையூறு இல்லாமல் செய்து கொண்டார்.

அமரகுந்தி — தாரமங்கலம் முதலிய ஊர்களில் நீர் வசதி இல்லாததால் அவ்விடங்களில் சரபங்க நதியைத்தேக்கி ஏரிகள் உண்டாக்கினார். தாரமங்கலத்தில் பக்கம் பக்கமாகக் குளிக்க ஒரு குளமும், குடிதண்ணீர் எடுக்க அட்டகோணமாக ஒரு குளமும் வெட்டி, படிக்கட்டுகளைச் செதுக்கிய கல்லுகளால் அமைத்து, குளத்தின் நடுவில் சிறு கேணிகள் பலவெட்டி நன்னீர் உண்டாக்கியுள்ளார்கள்.

கட்டி நாட்டில் ஓடுவது காவிரிநதியுடன் கலக்கும் சரபங்கநதம் என்பது. இது, சேர்வராய மலையில் உற்பத்தியாகித் திவட்டிபட்டி, ஓமலூர், தாரமங்கலம், வெள்ளாளபுரம், எடப்பாடி முதலிய ஊர்களின் வழியாய் மேற்கே ஓடி, ஆங்காங்கே பல ஏரிகளை நிரப்பி, பின் காவிரியுடன் கலக்கிறது. ஆனால், இந்நதி, மழைகாலத்தில்தான் பெருக்கெடுத்து ஓடுமே தவிர, ஏனைய காலங்களில் வறண்டு இருக்கும். ஆதலின், கட்டிமுதலியார் பரம்பரையினர் குளிக்க, பூசிக்க, சௌகரியமாயுள்ள பவானி என்னும் ஊரில் கோட்டையைக்கட்டி அதில்கோவில்களை அமைத்துக் குளிக்கக் காவிரியிலும், வானி நதி காவிரியில் கூடும் இடத்திலும், படிக்கட்டுகள் கட்டி வைத்துள்ளார்கள். கோவிலுக்குப் பல நிபந்தங்கள் செய்தவற்றைச் சாசனங்கள் அறிவிக்கின்றன.

இவர்கள் சண்டையில்லாத காலத்தில், நாடு செழிக்கப் பாய்ச்சலாதாரத்திற்குப் பல ஏரிகளைக் கட்டியுள்ளார்கள். அவைகளுக்கெல்லாம் "கட்டிசமுத்திரம்" "வேம்பன் ஏரி" என்ற பெயர்களை இட்டு, தண்ணீர் வரத்துக்கு வழிகளையும் வகுத்துள்ளார்கள்.

இன்னும், காவிரிக்கு, நெருஞ்சிப்பேட்டைக்குச் சமீபம் ஒரு அணைகட்டிப் பாய்ச்சலுக்கு ஏற்பாடு செய்துள்ளார். இப்போதும் ஆங்கு பழைய அணை ஒன்று இருப்பதைப் பார்க்கலாம்.

ஆதலின், கட்டிமுதலியார்கள் சிவபத்தி, அடியார் பத்திகளிற் சிறந்து, சுற்றம் ஓம்பி வேளாண்மை (விருந்து) செய்து வந்தபோதிலும், தங்களுடைய கடமையினும் வழுவாது அரசுசெய்து, நாட்டைக்காப்பாற்றி மூவேந்தர்

களுக்கும் நல்லவர்களாக நடந்துகொண்டார்கள் என்று சேலம், கோயமுத்தூர் ஜில்லாக் கெஜட்டீயர் என்ற நூல் களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

கட்டிமுதலியார்கள் அடிக்கடி பவானி வந்து, காவிரி யில் மூழ்கி, வேதநாயகியையும் சங்கமுகநாதரையும், தரிசித் துப்போவார்கள். அவர்கள் தங்குவதற்குக் கோவிலின் அருகே கோட்டைக்குள்ளேயே அரண்மனை கட்டியிருந் தனர். அவ்வரண்மனை இப்போது (Travellers Bangalow) பிரயாணிகள், உத்தியோகஸ்தர்கள் தங்குமிடமாய் சர்க்கார் வசத்தில் இருக்கிறது.

## (5) கட்டி நாட்டில் புகழ்பெற்ற புலவர்களும்–சித்தர்களும்.

பவானிக்கரையில் உள்ள பெருந்தலையூரில் வசித்த "பெருந்தலைச்சாத்தனார்" என்னும் பெரும்புலவர், குழுமூரில் (கொமுமத்தில்) அரசுசெய்த குமணனைப்பாடி, அவர் தம்பி இளங்குமணனுக்கு இருந்த மாறுபாட்டை நீக்கிச் சமரசம் செய்தவர். இவருடைய ஆறு பாடல்கள் புறநானூற்றில் உள்ளன.

அந்தியூரில் வசித்த "கீரனார்" என்பவர், சங்கமரீஇய புலவரில் ஒருவர். இவருக்கு "அந்திகீரனார்" அல்லது "அந்தியூர்க்கீரனார்" என்று பெயர். அகநானூற்றில் இவர் பாடிய பாட்டு ஒன்று இருக்கிறது. இவரை, இளங்கீரனார் என்று கூறுவதும் உண்டு. இவரை நற்கீரனின்றும் வேறு பிரித்து அறிய அந்திகீரனார் என்பது வழக்கம்.

சங்ககாலத்தில் இருந்த உலகடத்துக் கந்தரத்தனார் என்னும் புலவர், பவானிக்கு அருகாமையில்உள்ள உலகடம்

என்னும் ஊரைச்சார்ந்தவர். உலகடத்தை—உரகடம் என்றும், உரோகடம் என்றும் பேச்சு வழக்கில் வழங்குவது உண்டு.

திருமூலர் மரபில்வந்த கஞ்சமலைச் சித்தரும், தாரமங்கலத்துக்கு ஐந்து கல் தூரத்திலுள்ள கஞ்சமலையில் வாழ்ந்தவர். அங்கேயே சமாதிகொண்டவர். சமாதி எய்திய இடத்திற்குச் "சித்தர் கோவில்" என்று இன்றும் வழங்குகிறது. அமாவாசை தோறும் ஏராளமான சனங்கள் சித்தரைக்கண்டு வழிபாடு செய்கிறார்கள். இக்கஞ்சமலையில்தான், கருநெல்லிமரம் வளர்கிறதென்றும், இம்மலையிலிருந்து தான் தகடூர் அதிகமான் அஞ்சி, கருநெல்லிக்கனி பெற்று, தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு ஈந்தான் என்றும் புறநானூறு பேசுகின்றது. இம்மலையினின்றும் கோவில் ஓரமாய் மேல் பாகத்தில் ஓடும் அருவி, எல்லா நோய்களையும் போக்கவல்ல சத்திவாய்ந்ததென்பது உண்மைச்செய்தி. இன்றும் ஆங்கு பலபேர் சென்று மூழ்கிப்பலன் அடைவதைப் பார்க்கலாம்.

அரூருக்கு அணித்தாயுள்ள தென்கரை என்னும் ஊரிலும், கட்டிமுதலியார்கள் கோட்டையும், கோயிலும் கட்டியுள்ளார்கள். இவ்வூருக்கு அண்மையில் ஓடும் நதிக்கு வானி என்றே பெயர். வானி நதியின் தென்கரையில் உள்ளதால், இவ்வூர் தேன்கரையாயிற்று. இடைஞானியார் என்ற சித்தர் இவ்வூரார். இவர் பாட்டுக்கள் சித்தர் பாடல்களில் உள்ளன.

தாராபுரம் தாலூகா ஊதியூர் மலையில் தவம் செய்த கோங்கணச் சித்தரும் இக்கட்டி நாட்டவரே யாவர். இவர்

இன்னும் இரண்டு மூன்று இடங்களில் தங்கித்தவம் செய்துள்ளார். அவ்விடங்கள் எல்லாம் இவர் பெயராலேயே வழங்குவதைப்பார்க்கலாம்.

63 நாயன்மார்களில் ஒருவராகிய "கணம்புல்ல நாயனுர்" என்பவர், வடவெள்ளாற்றின் தென்கரையில் உள்ள இருக்குவேளூர் (பேளூர்) என்னும் ஊரார் ஆவர். கட்டிமுதலியார்கள் அவ்வூரிலும் கோட்டைகட்டி, ஆலயங்களை நிர்மாணித்து, கணம்புல்ல நாயனுருடைய திருவுருவத்தையும் கோவிலில் வெட்டிவைத்துத் திருவிழாக்கொண்டாட வேண்டுமென்று நிபந்தங்கள் செய்துள்ளார்கள்.

இவ்வாறு புகழ்பெற்ற கட்டிமுதலியார்கள் பரம்பரையில் 17-ஆம் நூற்றுண்டில் அரசுபுரிந்தது வணங்காமுடிக் கட்டி என்பவர். இவர் காலத்தில் இவருக்குக் கீழ்-மேல் கரைப்பூந்துறை நாட்டில் விஜயநகர சமஸ்தானத்தில் கீர்த்தி வாய்ந்த குப்பிச்சி வமிசத்தில் வந்த கொங்கு வேளாளர் வாரணவாசி என்பவர், சேனாதிபதியாக இருந்தார். வணங்காமுடிக்கட்டிக்கும் வாரணவாசிக்கும் சில காரியங்களில் மனத்தாங்கல் ஏற்பட்டு நாளுக்கு நாள் முற்றிக்கொண்டு வந்தது. வாரணவாசி, தான் நேராக ஒன்றும் செய்ய இயலாமல், அக்காலத்தில் மைசூரில் அரசு செய்த கண்டீரவநரச ராஜாவுடன் (1638–59 A. D.) சேர்ந்து கலகம் செய்தான். கி. பி. 1641-ஆம் ஆண்டில் கண்டீரவநரசராஜா கட்டி நாட்டின் மீது படையெடுத்துவந்து, காவேரிபுரம் கணவாய் வழியாக இறங்கி, அங்கே நடத்திய போரில் வாரணவாசி செய்த வஞ்சனையால் வணங்காமுடி தோல்வியுற்றுர். தோல்வியுற்றதும் காவேரிபுரம், சாம்பள்ளி முதல் கோயமுத்

தூர் வரையுள்ள ஊர்களைப் பிடித்துக்கொண்டார். இதனை மைசூர் சரித்திரத்தாலும்,

"மாற்றலர் மண்கொள்ளும் வணங்கா முடிக்கட்டி
ஆற்றலழிந் தேங்கி அடங்கினன்—தாற்ற ரம்பைப்
பூங்கனித்தேன் பாய் மருதப் பூந்துறையான் சேனைமதில்
பாங்குறுத்துச் செய் கொடுமை பார்த்து."

என்னும் தனிப்பாட்டாலும் அறியலாம். பவானியும் அப்போதே மைசூர் அரசாட்சியின்கீழ் ஆயிற்று.

கி. பி. 1667-ல் தொட்டதேவராயர் (1659–1672 A. D.) என்ற மைசூர் அரசர், கட்டிநாட்டின் மீது படையெடுத்து வந்து ஓமலூர்ச் சண்டையில் கட்டிமுதலியாரைத் தோல்வியுறச்செய்து, ஓமலூரைக் கைப்பற்றி மைசூர் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார்.

இறுதியாக கி. பி. 1672 ஆம் ஆண்டில் மைசூர் அரசன் தொட்டதேவராயன் படையெடுத்துவந்து ஈரோடையில் (ஈரோட்டில்) ஒரு பெரும்போர் நிகழ்த்தினன். இப்போரில் கட்டிநாடு முழுவதும் மைசூரார் ஆட்சிக்கு உள் அடங்கியது. தொட்டதேவராயனும் அவ்வாண்டிலேயே இறந்தான். கீர்த்தியுடன் 800 ஆண்டுகள் கொங்கு நாட்டில் அரசு செய்த கட்டிமுதலியார் வமிசம் கி. பி. 1672 ஆம் ஆண்டுடன் முடிவடைந்தது.

அவர்களுடைய ஆட்சிமுடிவு அடைந்தாலும், அவர்களுடைய புகழும் அவர்கள் பவானியிலும், பல்வேறு இடங்களிலும் கட்டிய கோட்டைகளும், சிவாலயங்களும்

இன்றும் நின்று நிலவுகின்றன. அவர்களுடைய பரம்பரையினர் இன்றும் ஓமலூர்ப்பக்கத்தில் இருக்கின்றனர்.

## திருக்கோயில்களும்—சிற்பசித்திரங்களும்.


இத்தலத்திற்கு யாத்திரைவாசிகள் வந்துதரிசித்துப்பூசித்துப்போற்றுதற்குரிய தேவர் கோட்டங்கள் தலத்திற்கே முதன்மையாகவிளங்குவன நான்கு. அவைகள் ஸ்ரீ சங்கமேச்சுரர் ஆலயம், ஸ்ரீ வேதநாயகியார் ஆலயம், ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம், ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஆலயங்கள் என்பன. இவ்வாலயங்களில், கொங்கில் சிறப்பாகப்பெயர் சிறந்துவிளங்கும் திருப்பேரூர், திருச்செங்கோடு, தாரமங்கலம் முதலிய திருத்தலங்களில் கண்விருந்தாய் மின்விப்பிரகாசிக்கும் உன்னதச்சிற்பசித்திரங்கள்போல் இல்லை. கொங்குச் சோழர்கள், விஜயநகர வேந்தர்கள், மைசூர் மன்னர்கள், மதுரைத்திருமலை நாய்க்க அசரர்கள் போன்று சிவதிருப்பணி செய்வதிலேயே சிந்தைகொண்டிருந்த அரசர்களின் கவனத்திற்கு இத்திருநணுத் திருத்தலம் எட்டாதிருந்த காரணம் யாதோ! அறியக்கூடவில்லை. இப்பொழுது இங்கு விளங்கும் சிவாலய விஷ்ணுவாலயங்களில், ஆங்காங்குச் சிறிது சிறிதாகக்காணும் கல்வெட்டுக்களில், ''அமரகுந்தி''யில் அரண்மனே கட்டிக்கொண்டு எழுபத்திரண்டு பாளையகாரர்களில் ஒருவராக விளங்கியிருந்த திருமிகு கட்டிமுதலியார் அவர்களாலும்; அவரது சகோதரி ஸ்ரீமதி சின்னம்மையாராலும் இவ்வாலயங்கள் கட்டுவிக்கப்பட்டதென்று விவரம் அறியப்படுவதால், சிற்பசித்திரங்கள் மிகுதியாகச் செய்துவைப்பதற்குப் போதிய வசதியில்லாமல் போயினபோலும்.

## ஸ்ரீ சங்கமேச்சுரர் ஆலயம்.


தலத்திற்கே முதன்மையுடையதாகவும், தலக்கடவுளாகவும் விளங்கும் சிவபெருமான் திருக்கோயில், ஸ்ரீ சங்கமேச்சுரர் ஆலயம் என்னும் பெயரையுடையது. இவ்வாலயம், சிவப்பதியாகிய இப்பவானிக் கோட்டையின் நடுவில் காவிரி நதியின் மேற்குக்கரையில் இருக்கிறது. இது சிற்ருலயம் எனினும், கருங்கற்களால் அழுத்தமும் அந்தமுமாக ஆக்கப்பெற்றிருக்கிறது. இக்கோயிலுக்கு முன் திருவாயில்கள் இரண்டுள்ளன. ஒன்று, வடக்கு நோக்கியும், மற்ருென்று கிழக்குநோக்கியும் இருக்கின்றன. வடக்கு நோக்கியுள்ள திருவாயில் மிகவும் அகலமானது. இவ்வழியில் சிவதரிசனம் செய்யச்செல்லும் அன்பர்கள், அவ்வாயிலின் முன் தாழ்வாரத்தில், சிறிய கோபுரத்துடன் கூடிய சிற்ருலயத்தில் கிழக்கு நோக்கிக் கோயில் கொண்டிருக்கும் விநாயகரைச் சேவித்துக்கொண்டு உள்ளே செல்லலாம். கிழக்குத்திருவாயில், வடக்குத்திருவாயிலைவிட அளவில் சிறியது. இவ்வாயிலின் எதிரில் கொடிக்கம்பமும், பலிபீடமும், உச்சியில் திருவிளக்கேற்றும் உயரமான விளக்குக்கற்றூணும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. திரு நந்திதேவர் நிருத்தமண்டபத்தின் நடுவில் அமர்ந்துள்ளனர். கிழக்குத் திருவாயிலின், வலம் இடமாகிய இருபக்கங்களில் நிருமதிலையொட்டி விநாயகரும், சூரிய தேவரும் கோயில்கொண்டிருக்கின்றனர்.

## நிருத்தமண்டபம் அல்லது வாத்திய மண்டபம்.


இம்மண்டபம் மிகவும் சிறியது. நடுவில் நிறுத்தப்பட்டுள்ள நான்குபெரிய கற்றூண்களில் பாலதண்டபாணி



பவானி ஸ்ரீ வேதநாயகியார் கோவில் முன்புறத் தோற்றம்.



பவானி ஸ்ரீசங்கமேச்சுரர் கோயில் முன்திருவாயில்
பெருந் திருக்கோபுரத் தோற்றம்.



பவானித் தலவிருட்சமாகிய இலந்தை மரம்.

யும், திருக்கோவிலைத் திருப்பணி செய்வித்த சிவநேசச் செல்வர்களின் திருவுருவங்களும் கற்சிலைகளில் சித்தரித்து வைக்கப்பெற்றிருக்கின்றன. மண்டபத்தின் மேல் தளத்தின் உட்பாகத்தில் உயரத்தின் நடுவில் அடுக்குத்தாமரை உருவம் அழகாகச் சித்தரிக்கப்பட்டு, அம்மலரின் மெல்லிய இதழ்களில் கிளிகள் வீற்றிருந்து, அம்மலரின் இதழ்களைத் தமது மூக்கினல் கோதுவது போலும் இருக்கின்றது. இதனுடன் தாரமங்கலம் ஸ்ரீ கட்டிமுதலியாருடைய அரசச்சின்னங்களாகிய விற்கோடி, புலி, மீன் உருவங்களும்; "விக்கிரம ஆண்டு சித்திரைமாதம், ரா. மா. முதலியார் நல்லுடையப்பா இம்முடிகட்டி முதலியார், நண்ணுவுடைய சுவாமியாருக்குச் சுற்றுத்திருநடை மாளிகை, முன் நிருத்த மண்டபம், சிகரம், பண்ணர்மொழியம்மைக்குக் கருப்பக்கிருகமும், அர்த்தமண்டபமும், மகாமண்டபமும், குமரர் கோவிலும், யாகசாலை, வசந்த மண்டபம், கோபுரம், திருமதில், சகஸ்ர லிங்கமும் பிரதிட்டை பண்ணினர்" என்ற கல்வெட்டும், கல் உத்திரங்களில் சிவபுராணக்கதைகளும் சித்தரிக்கப்பெற்றிருக்கின்றன.

## மகாமண்டபம்.

நிருத்தமண்டபத்தை அடுத்திருப்பதே மகாமண்டபம். இம்மண்டபத்தின் திருவாயிலின் இருபுறத்திலும், உயரமும் சிற்ப சித்திரங்களும் நிரம்பிய துவாரபாலகர்கள் கற்சிலைகள் பேருருவத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வுருவங்கள் கம்பீரத்தோற்றத்துடன் காட்சிக்கினியதாய் விளங்குகின்றன.

## உட்பிரகாரங்கள்—தெற்கு.

ஸ்ரீ சங்கமேச்சுரர் கருப்பக்கிருகத்தைச் சுற்றி நான்கு புறத்திலும் கருங்கற்களினல் எடுக்கப்பெற்ற மண்டபங்கள்

இருக்கின்றன. தெற்கு உட்பிரகாரமண்டபத்தில் சத்த மாதர் கற்சிலைகளும், வீரபத்திர சுவாமியும், விநாயகர் முதலாக அறுபத்துமூவர் கற்சிலைகளும், உயரமான கற் கட்டு மேடைமீது கோயில் கொள்ளச்செய்திருக்கின்றனர். தக்ஷிணாமூர்த்தி சிற்றாலயமும் இப்பிரகாரத்திலேயே இருக் கிறது.

## மேற்கு.

தென்கோடியில் விநாயகர் இருவர், அதற்கு அடுத்து இராமநாதர், ஸ்ரீ தண்டபாணி, பர்வதவர்த்தனி, பஞ்சலிங் கங்கள் முதலிய தேவர்களும், வடகோடியில் சனீச்சுரரும், சிற்றாலயங்களில் கோயில் கொண்டிருக்கின்றனர்.

## வடக்கு.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குச் செல்லு வதற்குச் சிறிய திட்டிவாசலும், நீளமான மண்டபத்தில் வரிசையாக வைக்கப்பெற்ற வாகனங்களும், சண்டீச்சுரர் சிற்றாலயமும், பைரவர் கோயிலும் இருக்கின்றன.

## கிழக்கு.

நவக்கிரகங்கள் சிறு கற்கட்டு மேடைமீது கோயில் கொண்டிருக்கின்றனர்.

## மகாமண்டபம்.

இம்மண்டபத்தில் வடக்குப்பாகத்தில் உயரமான கற் கட்டு மேடைமீது உற்சவமூர்த்தங்களை எழுந்தருளச்செய் திருக்கின்றனர். அம்மூர்த்தங்கள்:— ஸ்ரீ சந்திரசேகரர்,

பிரதோஷநாயகர், விநாயகர், (இதன், அடிப்பீடத்தில் "திருவானிகூடல்" என்று பெயர் வெட்டப்பட்டிருக்கிறது.) வேதகிரீச்சுரர், வேதநாயகி, வள்ளி—தெய்வயானையர்களுடன் ஸ்ரீ சுப்பிரமணிய தேவர், பிக்ஷாடனர், (இவ்வுருவம் அற்புதமான அழகு வாய்ந்தது) சோமாஸ்கந்தர் (இது, விகாரி ஆண்டு, பங்குனித்திங்கள், 10-ஆம் நாள் தொண்டைமண்டலம் களத்தூர், கேசவப்பெருமாள், செல்லப்பெருமாள் எனும் பெயரிய அதிகாரிகளால் உபயமாகச் செய்விக்கப்பெற்றது) பல்லக்குச் சொக்கர், ஸ்ரீ நடராசர், சமயாசாரியர் நால்வரும்; திருநீலசண்டநாயனரும், அவர் மனைவியும் முதலியன.

மகாமண்டபத்திற்கு அப்பால் அர்த்தமண்டபமும், அதற்கும் அப்பால் கருப்பக்கிருகமும் இருக்கின்றன. கருப்பக்கிருகத்தில், ஆவுடையாருடன் கூடிய ஸ்ரீ சங்கமேச்சுரர் கோயில்கொண்டு விளங்குகின்றனர். சுவாமி சந்நிதானத்தின் கருப்பக்கிருகத்தில் ஒரு கல் வெட்டிருக்கிறது. அது படிப்பதற்கு முடியாமலிருக்கிறது. ஆயின், அதில் "வாதவூரர் (மாணிக்கவாசகர்) போற்கட்டியோன்றுதர" என்ற சொற்றொடர் மட்டும் படிப்பதற்குத் தெரிகிறது.

## வேதநாயகியார் ஆலயம், நிருத்தமண்டபம்.

இவ்வாலயத்தின் முன், கம்பீரமான இனிய தோற்றத்தில், சிற்ப நுணுக்கம் நிரம்பிய சித்திரக் கற்றூண்கள் வரிசையுடன் அழகுபெற நிறுத்தப்பட்டிருக்கின்றன. இங்குள்ள ஆலயங்களிலுள்ள நிருத்தமண்டபங்களில் இதுவே கண்விருந்தாய், காட்சிக்கினிதாய், கவின்பெற விளங்கும் சிறப்பையுடையது. நடுப்பாகத்தில் நிறுத்தப்பட்டுள்ள

பத்துச்சித்திரக் சற்றூண்களில், சிவனடியார்கள் கற்சிலைகளும் திருப்பணி செய்த சிவச்செல்வர்களின் சிலைகளும், அந்தமும் அமைப்புமாய் எழில்பெற சித்தரிக்கப்பெற்றிருக்கின்றன.

மண்டபத்தின்மேல் விதானத்தில் தளம் செய்யப்பெற்றிருக்கும் இடத்தின் நடுவில், மூன்றடுக்காகக் கருங்கல்லில் மெல்லிய சிற்றுளிகொண்டு சிற்பி, தன்கைத்திறம் விளங்க அழகு சிறக்கும்படி சித்தரிக்கப்பெற்றுள்ள தாமரை இதழ்களில், அழகிய எட்டுக்கிளிகள் வீற்றிருந்து தமது மூக்கினுல் அம்மலர் இதழ்களைக் கோதிக்கொண்டிருக்கின்றன. இவற்றுடன் அம்மலரைச் சுற்றியும் நான்கு சதுரங்களில் பல விதப்பதுமைகள் சித்தரிக்கப் பெற்றிருக்கின்றன. மற்றும், பத்துச்சித்திரத் தூண்களின் மேலுள்ள கற்போதிகைகளில் சிங்கங்கள், தம் முன்கால்களைமடக்கி அமர்ந்து, அகலவாயைத் திறந்துகொண்டிருப்பதுபோலும், அதற்கும் மேலுள்ளநீண்ட கற்போதிகைகளின் நுனிகளில் வாழைக்குலைகள் பூ மொட்டுடன் தொங்குகின்ற மாதிரியும் சிற்ப சித்திரங்கள் அழகுபெற விளங்குகின்றன. பக்கவாட்டில் நாற்புறத்துமுள்ள கல் உத்திரங்களில் முனிவர்கள் நின்று தவம் செய்வதுபோலவும், பூதப்படைகள் கைகளில்வாள் கேடயங்களும் தாங்கி வரிசையாக அணிவகுத்து நிற்பது போலவும் சித்தரிக்கப்பெற்றிருப்பது நன்ருகவே இருக்கின்றன. இவற்றுடன் அம்மேல் தளத்திலேயே,

"பார்த்திவ ஆண்டு, தை மாதம், திருவாதிரை நக்ஷத்திரத்தில் "பண்ணார்மொழியம்மையார்க்கு நிருத்த மண்டபத்தை உபயமாக இம்முடிக்கட்டி முதலியார் சகோதரி சின்னம்மாளால் கட்டுவிக்கப்பெற்றதென்றும், இம்மண்டபத்

தைக்கட்டிய சிற்பி, குருவப்ப ஆச்சாரி மகன் இரங்கப்ப ஆச்சாரி தம்பி, இராமண்ண ஆச்சாரி என்றும் கையெழுத்திட்டு வெட்டப்பட்டிருக்கிறது."

நிருத்த மண்டபத்தின் மேற்குக் கோடியில், மகா மண்டபத்திற்குள் செல்லும் திருவாயிலின் இரு பக்கத்திலும், சிற்ப சித்திரங்கள் பிரமிக்கத்தக்கவாறு நிரம்பிய அழகு மிக்க துவாரபாலகர்கள் இருவர் கற்சிலைகள், நிறுத்தப்பட்டிருக்கின்றன.

தேவியார் திருச்சந்நிதிக்கு நேரே, நிருத்தமண்டபத்தின் முன்பாகத்தில் நாற்கால் மண்டபத்து நடுவில், சுமார் 30 அடி உயரத்தில் விளக்குக் கற்றூண் நிறுத்தப்பட்டிருக்கின்றது.

மண்டபத்திலுள்ள துவாரபாலர்களுக்கு எதிரில் தேவஸ்தானத்திற்குரிய இரும்பு உண்டியல் பெட்டியும், வடக்குப்பக்கத்தில் இரும்புவேலியிட்டுத் தடுத்துள்ள அறையில், தேவஸ்தான ஆபீசும் இருக்கின்றன.

வேதநாயகி திருக்கோயில் கிழமேல் நீளம் எழுபத்து ஒன்பது முழமும், தெற்கு வடக்கு அகலம் இருபத்தெட்டு முழமும் இருக்கின்றன.

## மகாமண்டபம்.

நான்கு கற்றூண்கள் நிறுத்திக் கட்டப்பட்ட இம் மண்டபம் மிகவும் சிறியது, சுற்றுப்பிரகாரத்தில் நீராழி மண்டபம் கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. வடக்குப்பக்கத்தில் அம்மன்பள்ளியறையிருக்கிறது. பள்ளியறை

ச்சுச்சுவாமி எழுந்தருள்வதற்கு ஈட்டி மரத்தில் தந்தத்தினால் நேர்த்தியான சித்திரவேலைகள் செய்யப் பெற்ற அழகிய பல்லக்கை, 1804 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ஆம் தேதி மிஸ்டர் "கேய்ரோ" என்ற ஆங்கிலத் துரை ஒருவர், வேதநாயகிக்கு உபயமாகச் செய்து வைத்திருக்கின்றனர்.

இம்மண்டபத்தில், ஆருத்ரா கலியாண உற்சவமும், ஷஷ்டி கலியாண உற்சவமும் நடாத்தப்படுகின்றன.

## ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயம்.

இவ்வாலயம், ஸ்ரீ சங்கமேச்சுரர், ஸ்ரீ வேதநாயகி ஆலயங்களுக்கு நடுவில் இருக்கிறது. சிறு கோயில். ஐந்து அங்கணத்தில் பதினான்கு கற்றூண்களால் எடுக்கப்பெற்ற தொரு கல் மண்டபத்தில், மரக்கம்பங்களில் இரும்புக் கம்பிகள் கோத்துத்தடுக்கப்பட்டதோர் அறையில், ஆறு முகத்தெய்வம், வள்ளி தெய்வானையர்களுடன் கோயில் கொண்டிருக்கின்றனர். மூலவர், கற்சிலை. ஆலயத்திற்கு எதிரில் மயில்வாகனம் நாற்கால் சிறுமண்டபத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. இம்மயில் வாகனத்தின் பீடத்தில், ஆவிளிப் பேரூரிலிருந்த கருணீகர், ஸ்ரீ கந்தப்ப பிள்ளை அவர்களால், கட்டுவிக்கப்பட்டதென்று வெட்டப்பெற் றிருக்கிறது.

இம்மண்டபத்தின் மற்றோர்பகுதியில், ஸ்ரீ மகாலட்சுமி யும், மூன்று சிரங்கள், மூன்று கரங்கள், மூன்று பாதங் களுடன் கூடிய ஜ்வரஹரர் அல்லது "சுரகண்டீச்சுரர்" என்ற சிவமூர்த்தமும், காசிலிங்கமும் கோயில்கொண்டிருக் கின்றனர்.

## ஆதிகேசவப்பெருமாள் ஆலயம்.

இவ்வாலயம், மேற்கூறிய மூன்று ஆலயங்களுக்கும் சிறிது தூரத்திற்கப்பால் பெரிதாகவே கட்டப்பெற்றிருக்கிறது. இத்தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஆதிகேசவப் பெருமாள் முன்னர், பவாநி நதிக்குத் தென்புறத்திலிருக்கும் காளிங்கராயன்புதூருக்குப் பக்கத்தில் ஆற்றின் கரையருகில் ஓர் ஆலயத்தில் கோயில் கொண்டிருந்தனர். அவ்வாலயம் கவனிப்பாரற்று, நாளடைவில் அழிவுற்றதனுல் அக்கற்களைக்கொண்டு திருமால் பக்தரான செல்வர் ஒருவர், முன் நின்று, ஸ்ரீ வேதநாயகியார் திருக்கோவிலுக்கு அணித்தாக ஓர் பக்கத்தில் ஆலயத்தை எடுப்பித்து அதில் ஆதிகேசவப்பெருமாளைக் கோயில்கொள்ளச் செய்தனர். இக்கோவிலின் மற்றொரு பகுதியிலுள்ள ஸ்ரீ இலட்சுமி தேவி கோயிலில் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களில் இத்திருமால் கோயில், புலியூர்க் கவுண்டர் என்னும் புண்ணியவானுல் எடுப்பிக்கப்பெற்றதென்று வரையப்பட்டுள்ளன.

## இரங்க மண்டபம்.

இம்மண்டபம் போதுமான அகலத்தைக்கொண்டிருக்கிறது. தென்வடல் அகலம் 39 முழமும், கிழமேல் நீளம் சுமார் 22 முழமும் இருக்கின்றன. இம்மண்டபம் ஐந்து அங்கணமாகப் பிரிக்கப்பெற்று 24 கற்றூண்கள் நிறுத்திக் கருங்கல்லில் கனமாக மேல்தளம் செய்யப்பட்டிருக்கிறது. சித்திரத்தூண்களில்லை. இரங்க மண்டபத்தின் நடுவில், கற்கட்டு கலியாண மேடையொன்று சிற்றுருவத்தில் இருக்கிறது. மேல் விதானத்தில் கருங்கல் தளத்தின் உட்பக்கத்

தில் மூன்றடுக்குத்தாமரை இதழ்களும், அவற்றில் நான்கு கிளிகள் வீற்றிருந்து மலர்களை மூக்கினுல் கோதுவதுபோ லுள்ள சிற்பச்சித்திரமும், உத்திரங்களில் நாற்புறத்தும் இராமாயணக் கதைகளும் நன்ருகச் சித்தரிக்கப்பெற்றிருக்கின்றன. மகாமண்டபத்தின் முன்திருவாயிலில் காவல்செய்து நிற்கும் துவாரபாலகர்கள் கற்சிலைகள், சிற்ப உயர்வு பெற்று உன்னதமான அழகில் விளங்குகின்றனர். திருமால் சந்நிதிக்கு எதிரிலுள்ள பித்தளைக் கொடிக்கம்பத்தின் உயரம் சுமார் 30, 35 அடியிருக்கும். பலிபீடம் சிறியது. கொடிக் கம்பத்துக்கு அருகில் நாற்கால் மண்டபத்தின் நடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் கருங்கல் விளக்குத்தூண் சுமார் 35 அடி உயரமும், 16 பட்டைகளுமாய் இருக்கின்றன.

இரங்க மண்டபத்தின் வடக்குத்திசையில், உருக்குமணி, சத்தியபாமையுடன் ஸ்ரீ வேணுகோபாலர் கோயில் கொண்டிருக்கின்றனர். இக்கோவிலை மைசூர் அரசரின் முன்னோர்களில் ஒருவரால் கட்டப்பட்டதென்று கூறுகின்றனர்.

இரங்க மண்டபத்தின் தென்திசையில் தனிக்கோயிலில் ஸ்ரீ சௌந்தர வல்லித்தாயார் கோயில்கொண்டிருக்கின்றனர். திருமால் சந்நிதிக்கும், தாயார் சந்நிதிக்கும் இடையில் ஸ்ரீ நம்மாழ்வாரும், ஸ்ரீ இராமானுஜரும், கோயில்கொண்டிருக்கின்றனர். இரங்கமண்டபத்துள்ள சில கற்றூண்களில்மட்டும் பட்டாபிராமர், கோதண்டராமர், திருப்பணி செய்வித்த தெய்வபக்தர்கள் திருவுருவங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

## மகா மண்டபம்.

மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருப்பக்கிருகங்கள் சிற்றுருக்களையுடையன. கருப்பக்கிருகத்திற்கு உச்சியில்

தூபியுடைய சிறு கோபுரம் எடுக்கப்பெற்றிருக்கிறது. மூலத்தானத்தில் ஆதிகேசவப்பெருமாள், ஸ்ரீ தேவி—பூதேவிகளுடனும், மகாமண்டபத்தில் விஷ்வக்சேனரும் எழுந்தருளியுள்ளனர்.

### உற்சவ விக்கிரங்கள்.

ஸ்ரீ ஆதிகேசவர் உபயநாச்சியார்களுடனும், ஊராச்சிக்கோட்டை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் உபயநாச்சியார்களுடனும், சௌந்தரவல்லித்தாயார், சக்கரத்தாழ்வார், வெண்ணையுண்டகிருஷ்ணன் முதலிய விக்கிரகங்களும் இருக்கின்றன. ஸ்ரீ சங்கமேச்சுரரைப் பூசித்துப் பேறுபெற்ற ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் இக்கோயில் மூலத்தானத்தில் கோயில்கொண்டிருக்கின்றனர். இவ்வளவே, திருமால் திருக்கோயிலைப்பற்றிய விவரங்கள்.

### காசி விசுவநாதர் - விசாலாட்சி, ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி கோயில்கள்.

ஸ்ரீ வேதநாயகியார், ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஆலயங்களுக்கு நடுவில், தனித்தனியாகச் சிற்றாலயங்களில், காசி விசுவநாதர்-விசாலாட்சி, ஸ்ரீ லட்சுமி நாராயணர்கள், கோயில் கோண்டு விளங்குகின்றனர்.

உள்மதில் சுற்றுப்பிரகாரத்தில் திருமடைப்பள்ளியும், தலவிருக்ஷமாகிய "இலந்தை மரமும்" அன்றி, வேறு சந்நிதிகளில்லை. முன்னணியில் ஸ்தூலலிங்கமாக விளங்கும் ஐந்து நிலைகளையுடைய பெருங் கோபுரமும், கோபுரத்தின் உட்பாகத்தில் கிழக்கிலும், மேற்கிலும் விநாயகரும், தண்டபாணியும், சிற்றாலயங்களில்கோயில்கொண்டிருக்கின்றனர்.

பெருங்கோபுரத்துக்கு முன்னே, ஒரு சிறு மண்டபத்தில் நந்திதேவரும், இடபதேவருக்கு மேற்கில் முசாபரி பங்களாவும், அதற்குச் சிறிது தூரத்தில் கோட்டையைக் காவல் காக்கும் அனுமார்கோவிலும், விநாயகர் கோவிலும், இவைகளுக்கு எதிரில் தேர்நிலையும், இந்நிலைக்குக்கிழக்கிலும், மேற்கிலும் காவிரி, பவானி என்னும் பெயர்களில் இரண்டுதெருக்களும் இருக்கின்றன.

## கல்வெட்டுக்களும்—காணும் செய்திகளும்.

பவானித் திருத்தலத்துள்ள சிவாலய—விஷ்ணுவாலயங்களில், கல்வெட்டுக்கள் அதிகமாய்க் காண்பதற்கில்லை. காணும் கல்வெட்டுக்களைக்கொண்டு ஆராய்ந்ததில், அடியிற் குறிப்பிடும் சிவச்செல்வர்கள் சிலரது திருப்பணிகள் இன்னவையென ஒருவாறு அறியப்படுகிறது. அவை:—

ஸ்ரீ சங்கமேச்சுரர் ஆலயத்து நிருத்தமண்டபத்தில் தாரமங்கலம் பிரபு, நல்லுடையப்பா என்னும் இம்முடிக் கட்டி முதலியார் என்பவர் சிவாலயமுதலியவற்றையும், வேதநாயகியார் நிருத்தமண்டபத்தில், ஒரு பார்த்திப ஆண்டில், கட்டிமுதலியார் என்பவர் மகாமண்டபத்தைக் கட்டுவித்ததாகவும், மேற்படி மகாமண்டபத்திலுள்ள மற்றொரு கல்வெட்டில் மேற்கூறிய கட்டிமுதலியார் அவர்களே மற்ற மண்டபங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பித்ததாகவும், மேற்படி சிவாலயத்திலுள்ள மண்டபமொன்றை கி. பி. 1734 ஆம் ஆண்டு முதல் 1765 வரை அரசு செய்த ஸ்ரீ கிருஷ்ணராஜவுடையார் தளவாய் "தேவராயன்" என்பவர் கட்டுவித்தாரென்றும், அதே ஆலயத்து முன்மண்டபத்திலுள்ள ஒரு கல்

வெட்டில், ஒரு விஜய ஆண்டில் அர்த்தமண்டபமும், விமானமும், சிவச்செல்வர் திரு. நாராயண கவுண்டர் என்பவரால் திருப்பணி செய்யப்பெற்றதென்றும் காணப்படுவனவாம்.

## படித்துறைகள்.

இப்பவாநித் தலத்தில் குளிப்பதற்குப், பூசிப்பதற்கும், சபம், தபம் முதலியன செய்வதற்கும், தங்கி இளைப்பாறுவதற்கும் போதுமானவசதிகளுடன் கூடிய படித்துறைகள் பலவிருக்கின்றன. எனினும், விசேடமாகக் கூறக்கூடிய படித்துறைகள் மூன்று. அவை:— திட்டிவாசல் அல்லது திருமஞ்சனப்படித்துறை, காயத்ரிபடித்துறை, கூடுதுறை என்பன.

(1) திருமஞ்சனப் படித்துறை:— இது, ஸ்ரீ ஆறுமுக சுவாமி சந்நிதானத்துக்கு எதிரில் இருக்கிறது. இருபத்தொரு முழ அகலமும், நீண்ட முப்பத்தெட்டு கற்படிகளும், குளிர்ந்த மர நிழலும், இருபுறத்திலும் செங்கல் சுவர்யெடுத்துச் செஞ்சாந்து பூசப்பட்ட கைப்பிடிச் சுவர்களும் கூடிய அழகிய படித்துறை. இதனைப்பொதுஜன நன்மைக்கெனக் கட்டுவித்த தருமசீலர், செட்டிநாட்டுத் தனவணிகரும், பாங்கரும், பவானி ஸ்ரீ சங்கமேச்சுர சுவாமி ஆலய தர்மகர்த்தருமாகிய திரு. பழ. ப. தேவராயன் செட்டியார் அவர்கள்.

(2) காயத்ரி படித்துறை:— இத்துறையைப்பற்றிய விவரங்களை இவ்வரலாற்றின் 14-ஆம் பக்கத்தில் காண்க.

(3) திரிவேணிச்சங்கமப் படித்துறை:— புண்ணிய நதிகளாகிய "காவிரி, பவாநி, அமுதநதி" என்னும் மூன்று

நதிகளும்கூடிப் பேராரவத்துடன் பெருக்கெடுத்து இருகரைகளிலும் அலைமோதி வெள்ளிய நுரையுடன் விளங்கும் கூடுதுறை புனிதமானது. இப் படித்துறை தென்வடலிலும், கிழமேலிலும் அகல நீளமுடையது. 2 ஆயிரத்துக்கு அதிகமான யாத்ரீகர்கள் தாராளமாகவிருந்து ஸ்நானஞ் செய்யலாம். படிப்படியான அடுக்குகளுடன் சுத்தமாகச் செதுக்கப்பெற்ற கருங்கற்படிகளை நன்றாகப்பொருந்தும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. நீண்டு பரந்த அக்கற்படித்துறையின் மேற்பாகத்தில் ஐந்து இடங்களில் ஆலும், வேம்பும் வளர்த்து அம்மரங்களின்கீழ் விநாயகர், நாகர், கற்சிலைகளை அழகாக வரிசைபெறக் கோயில் கொள்ளச்செய்திருக்கின்றனர். நதிகளில் மூழ்கிய அனந்தம் ஆடவரும், பெண்டிரும், அத்தெய்வங்களை அலங்கரித்துப் பூவிட்டுக் கற்பூரங் கொழுத்திக் கும்பிட்டு வலம்வரும் காட்சி ஆனந்தமாயிருக்கிறது. இவையன்றி, வைதீகர்களுக்குச் சபம், தபம், பூசைகள் செய்வதற்கு இரண்டு கல்மண்டபங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. பெரும்பிரவாகசமயத்தில் மக்கள் வெள்ளத்தினுல் கஷ்ட நஷ்டப்படாதிருப்பதன் பொருட்டு, பவானித் தாசில்தாரும், டிவிஷனல் ஆபீசரும் முன்னின்று தர்மவான்களிடத்துப் பொருள் வசூலித்து நிரம்பவும் பந்தோபஸ்தாயிருக்கும்படி வலுவுள்ள இரும்புத் தண்டவாளத்துண்டுகளைக் கெட்டியாக ஆளத்தில் நட்டு, உருண்டை இரும்புக்கம்பிகளைத் துளையிட்ட தண்டவாளத் துண்டுகளில் கோத்து, முழுகுவோர்கெட்டியாகப்பிடித்துக் கொண்டு மூழ்கும்படி நன்றாக வசதி செய்திருக்கின்றனர். இரவு நேரத்தில் வெளிச்சந்தர மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இப்படித்துறையின் மேட்டிலிருந்து நோக்கினுல், வடக்கில் நீண்ட காவிரிப்பாலமும், ஊராச்சிக்

கோட்டை மலையும், வடகிழக்கில் திருச்செங்கோடும், கிழக்கில் தென்னந்தோப்புகளும், வயல்களும், அக்கரையில் நெசவுத்தறிகள் மிகுந்த குமாரபாளையமும், தெற்கில் மீன் பிடிப்பவர்களும், பரிசில் அல்லது ஓடம் ஆற்றில் விடுபவர்களும் தங்களுள்வரிவைத்து வசூலிக்கப்பெற்ற தொகையைக் கொண்டு நட்டாற்றில் உயர்ந்த பெரும்பாறையின்மீது கட்டுவிக்கப்பெற்ற விநாயகர் சிற்றாலயமும், பேருமாள் மலையும் நேர்த்திரானந்தமாகத் தெரிவதைக் காணலாம்.

## பராசரமுனிவரும்-அமுதலிங்கப்பிரதிட்டையும்.

காத்தற்கடவுளாகிய திருமால், தேவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்ததுபோக எஞ்சிய அமுதத்தை ஓர் குடத்திலிட்டு, புண்ணியப்பதியாகிய இந்நண்ணூரிலேயே எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும் பராசரமுனிவர்க்குக் கொடுத்தருளினர். அம்முனிவர் அவ்வமுத கலசத்தை, இத்தலத்தின் நதிக்கரையில் ஓர் இடத்தில் பத்திரப்படுத்திவிட்டுத் தவஞ் செய்தனர். அமுதத்தை உண்பதில்பேராவல் கொண்ட "வக்கிராசுரன், தண்டகாசுரன், வஞ்சகாசுரன், வீராசுரன்" என்னும் அரக்கர் நால்வர், அக்குடத்தைக் கவர்ந்து செல்ல முயன்றனர். அதனையறிந்த முனிவர் அஞ்சி, அபயவரதனாகிய சிவபெருமானிடத்து முறையிட்டனர். அது கேட்ட அப்பெருமான், தமது அருட் சத்தியாகி வேதாம்பிகையிடத்துச் "சண்டகாதினி, வீரை, சயந்தி, சயமர்த்தனி" என்னும் நான்கு துர்க்கைகளை வரவழைத்து அவர்களைக்கொண்டு வக்கிராசுரனாதியரை வதைத்து, அத்துர்க்கைகள் நால்வரையும் பவானித்தலத்தின் நாற்றிசைகளுக்கும் காவலாயிருந்து காத்துவருமாறு கட்டளையிட்டனர். அவர்களில் ஒருத்தி, பவானித்தலத்தின் மத்தியிலுள்ளதொரு கோவிலில் "செல்லாண்டியம்மன்" என்ற பெயரில்

இப்பொழுது விளங்கிக்கொண்டிருக்கின்றனள். இவளுக்கு ஆண்டு தோறும் மாசி மாதத்தில் நடக்கும் உற்சவத்தில் ஆயிரக்கணக்கான ஆடு, கோழிகள் உயிர்ப்பலி இடப்படுகின்றன. எஞ்சிய மூன்று துர்க்கைகளைப்பற்றிய செய்திகள் அறியுமாறில்லை. பின்னர், பராசரமுனிவர், அமுத குடத்தைச்சேமித்து வைத்திருந்த இடத்தினின்றும் எடுத்த போது, அது கடினமாய்த் திரண்டிருத்தலைக்கண்டு அதிசயித்து, அதனைக் காவிரி, பவானி நதிகளின் இடையில் ஓரிடத்தில் சிறுகோயில் ஒன்று எடுத்து, அதில்முறைப்படி மூர்த்திப் பிரதிட்டைச்செய்து வழிபட்டனர். அதற்கு "அமுதலிங்கம்" என்று இப்பொழுது பெயர் கூறப்படுகிறது. அவ்வமுத லிங்கர் சிற்ருலயம், ஸ்ரீ சங்கமேச்சுரர் திருக்கோயிலின் தென் வெளிமதிற் சுவற்றிற்குச் சுமார் 60 அடி தூரத்தில் கூடு துறைக்குச்செல்லும் வழியிலிருக்கிறது. அவ்வமுத குடம் பதிந்திருந்து அகழ்ந்தெடுத்த இடத்தில் அமுதநதி உற்பவித்து, காவிரியும், பவானியும் கூடுமிடத்தில் மறைமுகமாக அதாவது அந்தர்வாகினியாகச் சென்று கலக்கின்றது.

(பவானித்தல புராணம்).

## சகஸ்ரலிங்கம்.

அமிர்தலிங்கேச்சுரர் ஆலயத்திற்குச்சிறிது வடகிழக்கில் சகஸ்ரலிங்கத்திற்குக் கற் கோயிலொன்று, ஓர் சிறு பாறையின்மீது கட்டப்பட்டிருக்கிறது. அமுதலிங்கம்—சகஸ்ரலிங்கம் ஆகிய இருகோயில்களுக்கும் அண்மையில் சிறியதொரு பூந்தோட்டமுமிருக்கிறது. சகஸ்ரம் = ஆயிரம்.

## ஆடிப்பதினெட்டுக் காவிரிப் பெருக்கும்—கூடுதுறை முழுக்கும்.

ஆடிமாதத்தில் காவிரிநதி, தனது பூரணப்பிரவாக நிலையை அடைகிறது. பூமிசெழித்துப்பயிர்கள் கொழுத்துத் தானியங்கள் மிகுதியாக விளைந்து மக்களின் நலத்துக்கு முதன்மையான நிலைக்களனாக விருக்கும் பருவமருத காவிரியின் பெருவெள்ளம், மன்னுயிர் வாழ்வதற்கு ஜீவநாடியாக விளங்கும் நெற்பயிர் செய்தற்குரிய வேளாண்மையின்


பொருட்டு நொங்கும் நுரையுமாகப் பொங்கித்திரண்டு, அகன்ற ஆற்றின் இருகரைகளிலும் வெள்ளிய அலைகள் மோதிப்புரள ஆரவாரத்துடன் பெருகிவருகிறது. மன்பதைகளாகிய நம்முடைய நல்வாழ்வின் காரணமாக இப்படி ஆனந்தமாகப்பொங்கிப் பெருகிவரும் பெருவெள்ளமாகிய தேய்வநதி, வரநதி, போன்னி என்று பெயர்களைப் பெற்ற காவிரிநதியைப் பெருமகிழ்வுடன் நல்வரவேற்றுப் போற்றிக்கொண்டாடுவது மக்களின் இயற்கையன்றோ! இது கருதியே மூதறிவுடைய நமது முன்னோர்கள், "ஆடிப்பேருக்கு" என்று ஓர் நன்னாளை ஏற்படுத்திவைத்தனர். மகிழ்ச்சிக்குரிய அந்நன்னாளில் ஆடவர்கள், பலவிதஒஷதிகள் கலந்த புது வெள்ளமாகிய காவிரியில் நீராடி, அத்தெய்வநதியைக் கைகூப்பி இருகரங்களாலும் கும்பிட்டுப்பெருவெள்ளத்தின் பெருக்கைக்கண்டு இ வி ப ஞ் ச மி ல் லை என்று பரமானந்தம் அடைவர். நன்மணக்குரிய பெண்மக்கள் பல்வித ஆடை ஆபரணங்களால் தங்களை நன்ருக அலங்கரித்துக் கொண்டு விதவிதமான சித்திரான்னங்களுடன் காவிரிக்குச் சென்று, பொன்னி நதிக்குப்பூசையிட்டு, பல்வகைப்பழங்கள், கடலை, போறி, அவல், கரும்பு, இளநீர் முதலியனவைத் துப்படையலிட்டு, உற்ருர், உறவினர்களிக்க உண்டுகளிப்பர். அன்று இளஞ்சிறுவர்கள், சிறு சிறு இரதங்கள் கட்டி, தெருவில் அழகாக உருட்டியபடி ஊர்வலஞ்சென்று காவிரியில்பூசையிட்டுத்தம்முடன் ஒத்த சிருர்களுடன் உளங்களிக்க உண்டு உடல்பூரிப்பர். எனவே, "ஆடிப்பெருக்கு" என்பது சர்வஜனங்களும் காவிரிக்குச்சென்று அந்தத்தெய்வநதியைச் சிறப்பிக்கும் வகையில் சந்தோஷம் கொண்டாடும் ஒருவிழா நாளாம். அவ்விழா திருநணுவெனும் பவாநித்திருத்தலத்தில் கா வி ரி யு ம் , பவாநியும் ஒருங்கே கூடும் சங்கமத்துப் படித்துறையில் எண்டிசாமுகங்களினின்றும் ஜனசமுத்திரம் பெருக்கெடுத்து வந்ததோ! என்று கூறும்படி சுமார் 20, 30 ஆயிரம் ஜனங்கள் பலவழிகளிலும் பவாநியை அடைந்து, அப்புண்ணியத்துறையில் மூழ்கி, அப்புனித நதி தன் பாவங்களைப்போக்கியதாகப்பூரித்து அவளுக்குப் பூவினுலும், பழங்ககளாலும் சிறப்பாகப்படையலிட்டுப்பூசித்து, தமது

டன் வந்த உற்றுருறவினர்களுடன் அக்காவிரியின் மகிமைகளைப்பலவகையாகக் கூறிக் கொண்டாடிமகிழ்வர். அச்சமயம், பவானி ஊர்முழுதும் ஒரே பெருங்களிப்பாய் எங்கும் குதூகலமே கொண்டானடிப்பதுபோல் இருக்கும். இங்ஙனம் அகமகிழ்ச்சியைப் பெருக்கும் ஆனந்தகரமான ஆடிப் பதினெட்டாம்பெருக்குப் பண்டிகையைச் சிற்சில வரிகளால் வருணிப்பது கூடாதகாரியம். நேரில் கண்டாரே அதன் ஒப்பற்ற சிறப்பை உணர்தற்குரியவராவர்.

## விழாக்களும்—நிகழும் காலங்களும்.

சீரார் நணுவெனும் ஏரார் பவானியில், திங்களஞ்சடைசேர் சங்கமேச்சுரருக்கும், நீதிசேர் செல்வ ஆதிகேசவப்பெருமாளுக்கும் நிகழும் பெருந்திருவிழா, சித்திரை மாதத்தில் பன்னிரண்டு நாட்கள் சீரும் சிறப்புமாக நடைபெறுகிறது. மற்றைய விழாக்கள் அடியில் வருவாறு மாதவாரியாக நிகழ்ந்து முடிவுபெறும். அவ்விழாக்களின் விவரம்:—

சித்திரை மாதம், திருவாதிரை விழாவும், அப்பர்சுவாமிகள் குரு பூஜையும், மொண்டிபாளையம், திரு K. சின்னப்ப கவுண்டர் அவர்களாலும், ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை, பருவக்கிராமம் மணியம், திரு. அழகிய கவுண்டர் அவர்களாலும், ஆனி மாதம் திருமஞ்சன விழா—சேலம் ஸ்ரீமதி நாகம்மாளாலும், மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூஜை, கள்ளிப்பட்டி திரு C. K. இராமசாமிக் கவுண்டர் அவர்களாலும், ஆடிமாதம் பதினெட்டாம் பெருக்கு விழா, ஸ்ரீ சங்கமேச்சுரருக்கேயன்றி, ஆதிகேசவப்பெருமாளுக்கும், சின்னக்கோவில் ஸ்ரீ காசிவிசுவநாதருக்கும், தேவஸ்தானத்தாராலும், ஆடி சுவாதி நக்ஷத்திரத்து ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை தேவஸ்தான அர்ச்சகர்களாலும், ஆடிப்பூர விழா, பெரிய கோவிலுக்கேயன்றி, சின்னக்கோவிலுக்கும், பெருமாள் கோவிலுக்கும் தேவஸ்தானத்தாராலும், ஆவணிமாதம் விநாயக சதுர்த்தியும், ஆவணிமூலவிழாவும் தேவஸ்தானத்தாராலும்;



பவானித் திருக்கோயில் பஞ்சமூர்த்திகள் வாகனங்களில் வீற்றிருந்தருளும் காட்சி.



ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் கோவில் முன்புறத் தோற்றம்.



பாவானி கூடுதுறைத் தோற்றம்.

புரட்டாசி மாதம் நவராத்திரி விழா தேவஸ்தானத்தாரா லும், ஸ்ரீ வேதநாயகியாருக்குச் சுக்கிலபக்ஷ ஏகாதசிக்கு மேல் பௌர்ணமிக்குள்ளாக லக்ஷார்ச்சனையும், சங்கமேச் சுரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், இறுதிநாளன்று ஸ்தபன அபிஷேகமும் தேவஸ்தான அர்ச்சகர்களாலும், ஐப்பசி மாதம் சஷ்டி விழாவும், அன்னபிஷேகமும், தேவஸ்தானத் தாராலும், சஷ்டி கலியாண விழா, சில அன்பர்கள் பொருள் உதவி பெற்று மேற்படி தேவஸ்தானத்து இராமலிங்க சோதிடராலும், கார்த்திகை மாதம் பரணி, கிருத்திகை, தீபங் கள் தேவஸ்தானத்தாராலும், மார்கழி மாதம், ஆருத்ரா பத்து நாள் விழா தேவஸ்தானத்தாராலும், மேற்படி விழாவில் கலியாண உற்சவம் மட்டும் (ஏற்காடு) திரு. கந்தசாமி செட் டியார் அவர்களாலும், தரிசன அபிஷேகம் அக்கிரகார மகா சனங்களாலும், வைகுண்ட ஏகாதசி ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாளுக்குத் தேவஸ்தானத்தாராலும், தை மாதப் பொங் கலும், இரண்டாம் நாள் கனுவும், பூசவிழாவும் தேவஸ் தானத்தாராலும், மாசிமாதம் மகாசிவராத்திரி விழா முதற் கால அபிஷேகம் திரு. அள. சு. ப. பழ. சுப்பிரமணியஞ் செட் டியார் அவர்களாலும், இரண்டாம் கால அபிஷேகம் அக்கிர கார மகாசனங்களாலும், மூன்றும் கால அபிஷேகம் கள்ளிப் பட்டி திரு. C. K. இராமசாமிக் கவுண்டர் அவர்களாலும், நான்காம் கால அபிஷேகம் உள்ளூர் மளிகை திரு. சே. க. முத்தியாலுசாமி செட்டியார் அண்டு சன்ஸ் அவர்களாலும், ஸ்ரீ செல்லாண்டியம்மன் இருபத்திரண்டு நாள் விசேட விழா தேவஸ்தானத்தாராலும், பங்குனி மாதம் யுகாதி விழாவும், பங்குனி உத்திரம் 12-நாள் விழா, ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயத்தில் தேவஸ்தானத்தாராலும், ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றன.

இவையேயன்றி, பவானி ஸ்ரீ காசிவிஸ்வநாதர் ஆலயத் தில் கார்த்திகேயன் கருணைக்கழகத்தாரால், ஒவ்வோர் கிருத்திகை நக்ஷத்திரத்திலும், கலியுகவரதனாகிய ஸ்ரீகந்தபிரானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் சிறப் பாகச்செய்து கொண்டாடப்படுகிறது. அன்று வித்துவான்

களைக்கொண்டு ஆலயத்தில் சொற்பொழிவுகளும் செய்வித்து வருகின்றனர்.

ஆடிமாத விசேட கிருத்திகையில் வெற்றி வேற்பெருமானுக்கு ஆண்டுவிழா அதிக விமரிசையுடன் மேற்படி கழகத்தாரால் கொண்டாடப்பட்டு வருகிறது.

### வாகன வகைகள்.

வெள்ளி இடபவாகனம் சிறியது 1. வெள்ளி கருடவாகனம் சிறியது 1. மர பூதவாகனம் 2. யாளிவாகனம் 1. சிங்கவாகனம் 1. இடபவாகனம் 2. குதிரை வாகனம் 2. யானை வாகனம் 2. பெருச்சாளி வாகனம் 1. அன்ன வாகனம் 1. கிளி வாகனம் ஆகமொத்தம் 15. இவ்வாகனங்களேயன்றி, பல்லக்கு (2) சப்பிரம் 5. கண்ணாடி விமானம் 1. முதலியனவும் இருக்கின்றன.

### ஆபரணங்கள்.

நவரத்தினக் கற்கள் இழைத்த எட்டு மதாணிப்பதக்கங்களுடன் கூடிய மாலை ஒன்று. சந்திரஹாரம் ஏழு வடங்களுடன் கூடியது ஒன்று. அவல் சரம். சீனிச்சரம் 1 திருமாங்கல்யம் தங்கக்கொடியுடன் 1. மேற்படி வெள்ளிக்கொடியுடன் 1. மற்றும் பல.

## புராணப்பிரபந்தங்களும்-பாடிய புலவர்களும்.

இத்தலத்துக்குப் "பவாநிகூடற் புராணம்" என்ற பெயரில் ஒரு புராணம் தமிழில் செய்யுள் வடிவில், ஒன்றுக்குப் பன்னிரண்டு பக்க அளவில் சென்ற சித்திரபாநு ஆண்டு, ஆடி மாதம் சென்னை, பாஸ்டர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது. அது இன்றைக்குச் சரியாக 60 ஆண்டுகள் ஆகின்றது. இப்புராணத்தைப்பாடிய புலவர், கோயமுத்தூரைச் சார்ந்த ஓராட்டுக்குப்பைசெட்டிபாளையம், தொண்டைமண்டல கொண்டைகட்டி வேளாளர் மரபு மகாவித்துவான் திரு. வாசுதேவ முதலியார் என்னும் பெயரினர். இது பாயிரம் முதல், சிவார்ச்சனைச் சருக்கம்

ஈருகப் பதினெட்டுச் சருக்கங்களும், தொண்ணூற்ருெரு செய்யுட்களும் உடையது.

(2) "பவாநி கூடற்புராண வசனம்" என்ற பெயரில் ஓர் புராணம் கணக்கம்பாளைய வாசியும், பவானி போர்டு உயர்தர பாடசாலையில் தமிழாசிரியராயிருந்து இப்பொழுது ஓய்வு பெற்றுக்கொண்டிருப்பவருமாகிய திருவாளர் கு. குமாரசாமிப் பிள்ளையவர்களால், எழுதப்பட்டு அச்சிடப் பெற்றிருக்கிறது.

(3) வேதநாயகியம்மன் பிள்ளைத்தமிழ், இது முகலூர் திரு. கந்தசாமிக்கவிராயர் அவர்களால் பாடப் பெற்றது.

(4) "பவாநி பதிற்றுப்பத்தந்தாதி" இது, பவானிகூடற் புராண வசனம் எழுதிய ஆசிரியர், திரு. கு. குமாரசாமி பிள்ளை அவர்களாலேயே பாடப்பட்டு பவானி ஸ்ரீ சங்க மேச்சுரர் ஆலயத்து அர்ச்சகர், சிவஸ்ரீ சு. நடேசக் குருக் கள் அவர்கள் பொருள் உதவிபெற்று அச்சேறப்பெற்றது.

## கேரோ துரையும்—அவரது தெய்வபக்தியும்.

கி. பி. 1779-ஆம் ஆண்டில் கொங்கு நாடு ஆங்கிலர் அதிகாரத்தில் அடங்கியதும் அதனை இரு ஜில்லாக்களாகப் பிரித்து வடபகுதிக்குப் பவானியைத் தலைநகராகவும், தென் பகுதிக்குத் தாராபுரத்தை தலைநகராகவும் ஏற்படுத்தினர். வடபகுதிக்கு ஜில்லாத் தலைமை அதிகாரியாகக் கலெக்டர் "கேப்டன் மேக்ளியாட்" என்பவர் அமர்ந்திருந்தார். இத் துரையவர்கள் அதிகாரம் ஏற்றுக்கொண்டது கி. பி. 1802 ஆம் வருடம் ஜுலை மாதம் 6-ஆம் தேதி. இவருக்குப்பிறகு கேரோ (Khero) என்ற துரையவர்கள் அதே மாதம் 16-ஆம் தேதியில் கலெக்டர் அதிகாரம் ஏற்றுக்கொண்டார். 24—11—1804-ஆம் ஆண்டில் இருபகுதிகளும் ஒன்ருகச் சேர்ந்தபோது அதற்கு மேற்குறித்த கேரோ துரையவர் களே கலெக்டராயிருந்து 20—1—1815-ஆம் ஆண்டுவரை அதாவது ஒன்பது வருடம் அதிகாரம் செய்தார். பவானி தலைநகராயிருந்த காலத்தில், சேலம் ஜில்லாவின் பெரும் பாகம் அதற்கு உட்பட்டிருந்தது. கேரோ துரையவர்கள்

குடிகளுக்கு உபகாரியாயிருந்து நல்லார் என்று எல்லோரும் கூறும்படி புகழ் பெற்றிருந்தார். அல்லாமல், தமது குடிகளிடத்து அன்பும், ஆதரவுமாயிருந்து அவர்களது குறைகளை அமைதியுடன் செவிசாய்த்துக் கேட்டுத் தக்கதை உரிய காலத்தில் விரைந்து செய்து வந்தனர். அம்மட்டோ! அவர் ஆங்கிலராகவும், கிறிஸ்துவ மதப்பற்றுடையவராகவும் இருந்தாலும், இந்து மதத்தினிடத்தும், விரும்பிய வரங்களை விரைந்தளிக்கும் வேதநாயகியாரிடத்தும், மெய்யன்பு கொண்டு அவரைத் தினந்தோறும் மறவாது தொழுதும்வந்தனர். இச்செய்தி, இப்பக்கங்களில் பிரபலமாக யாவராலும் சொல்லப்பட்டு வருகிறது. வேதவல்லியாரிடத்துக் கொண்ட அன்பு காரணமாக அத்துரையவர்கள், தேவியார்க்கு விலையுயர்ந்த பொன்னுபரணங்களையும், வாகன வகைகளையும், உபயமாகச்செய்து கொடுத்தாரென்று பலரும் கூறுகின்றனர். அவ்வாபரணங்களையும், வாகனங்களையும் இப்பொழுதும் நாம் பார்க்கலாம். இவைகளேயன்றி விலை மதிப்புடையதும், பலவிதச் சித்திரக்கொடிகளால் சிற்பம் வல்லாரைக்கொண்டு நன்ருகச் சித்தரிக்கப் பெற்றதுமான "தந்த கட்டில்" ஒன்றையும் அத்துரையவர்களே செய்துகொடுத்தாரென்றும் கூறுகின்றனர். அக்கட்டிலில் அவர் பெயரும், செதுக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த அதிகாரத்தை மேற்கொண்டிருந்த ஒரு ஆங்கிலத்துரை, நமது இந்து மத தெய்வத்தினிடத்தில் மெய்யன்புகொண்டு வழிபட்டுவந்தாரென்ருல், அது பெரிதும் அதிசயிக்கத்தக்க செயலன்றே சொல்லவேண்டும்.

### கேரோ துரை அவர்களும் அவர் உயிர் தப்பிய விதமும்:—

ஸ்ரீ சங்கமேச்சுரர் திருக்கோவிலின் முன்புறமுள்ள பெரியபங்களாவை, கேரோ துரையவர்களாலே கட்டப்பெற்றதென்றும், அப்பங்களாவிலிருந்துதான் அவர் அதிகாரம் செய்துவந்தாரென்றும், ஒரு நாள் இரவில், அவர் அயர்ந்துநித்திரை செய்யும்போது அவரதுகனவில் வேதநாயகியார் தோன்றி, 'அன்பனே! இப்பொழுதே இக்கட்டிடத்தை விட்டு அப்பாற் செல், இன்றேல் உயிருக்கு அபாயம்'

என்று கூறினராம். துரையவர்கள் திடுக்கிட்டெழுந்து விரைந்து பங்களாவைவிட்டு அப்பாற் சென்றனர். அடுத்த நொடியிலேயே அப்பங்களா அடியுடன் நிலத்தில் சாய்ந்து வீழ்ந்தது. துரையவர்கள் அதிசயித்துத் தம்மிடத்து அத் தேவியார்க்கிருந்த பேரன்புக்குப் பெரிதும் மகிழ்ந்து, மேலும் அத்தெய்வத்தினிடத்து மிகுதியான பக்திசெலுத்தி வந்தனர். அதன்பின்னரே அதே இடத்தில் பலமான கடைக் காலிட்டுப் பெரியதொரு பங்களாவைக்கட்டி அதில் வசித்து வந்தனர். அதுதான், இப்பொழுது அக்கலெக்டர் கேரோ துரை அவர்களின் நினைவின் அறிகுறியாக விளங்கிக்கொண் டிருக்கிறது. தற்பொழுது அப்பெரும் பங்களா பிரயாணி கள் தங்கும் இடமாக உபயோகப்பட்டு வருகிறது.

ஸ்ரீ வேதநாயகியார் ஆலயத்தின் எதிர்ப்பாகத்திலுள்ள மதிற்சுவரில் சில சிறு துவாரங்கள் இருக்கின்றன. அத் துவாரத்தின் வழியாகவே கேரோ துரையவர்கள் நின்று, அம்பிகையை அன்பு ததும்பத் தோத்தரித்துத் தொழுது வந்தனரென்ப.

## ஸ்தல அமைப்பு.

கொங்கின் எழு சிவ ஸ்தலங்களுள் மூன்ருவதாக விளங் குவதும், ஸ்ரீ ஞான சம்பந்தப் பெருமான் திருவடி தோயப் பெற்றதால் புனிதம் பெற்றதும், வற்ருத வளத்தால் ஜீவ நதி யெனப் பெயர் வாய்ந்த காவிரி நதியும், பவாநி நதியும், பெருக்கெடுத்துத் தம்முள் மூழ்குவோரின் பாவங்களைப் போக்கும் மகிமை சிறந்ததும் பவாநி திருத்தல மென்பது. இத்தலம் அமைந்து விளங்கும் நிலப்பரப்பு காவேரி, பவாநி நதிகளால் சூழப் பெற்றிருப்பதால், மிகவும் சுருங்கிய அள வுடையது. இத்தலத்தில் பிரதானமாய் விளங்கும் வீதிகள் மூன்று. இடையிலுள்ள இராஜ வீதியில் போர்டு ஹைஸ் கூலும், பெண்பாடசாலையும், பாங்குகளும், ரைஸ்மில், ஜின் னிங்மில்களும், கவர்ன்மேண்டு ஆபீசுகளும், மளிகை, ஷாப்பு, ஜவுளிக்கடை களுமிருக்கின்றன. பவாநி நதியின் பாலத்திற்கு அருகில் ஆஸ்பத்திரியும், மோட்டார் ஸ்டாண் டும் தகுந்த வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன.

காவேரி நதியின் அருகிலுள்ள காவேரி வீதியில் ஜமக்காளத்திற்குப் பிரசித்தமான ஜமக்காளக்கடைகள் மிகுதியாயிருக்கின்றன.

## கைத்தறி நெசவும்—ஜமக்காள உற்பத்தியும்.

பவாநி, விசேடமான ஜமக்காள நெசவுக்கு பேர் சிறந்தவூர்- இவ்வூரில் நேர்த்தியான முறையில் பலவகை தினுசுகளில் பட்டு, நூல், ஜமக்காளங்கள் நெய்யப்பட்டு பல இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. இவ்வூரிலும் இதற்கடுத்த குமார பாளையத்திலும் கைத்தறிகள் ஏராளமாக இருக்கின்றன. இவ்வூரில் 2000/வீடுகளும் 12000/ஜனத்தொகையுமுள்ளதென ஜனக்கணிதத்தால் அறியப்படுகிறது.

## திருத்தேர்களும் அவைகள் வடம் பிடிக்கும் காலமும்:—

இத்தலத்தில் ஐந்து தேர் நிலயங்கள் இருக்கின்றன. (1) ஸ்ரீ சங்கமேச்சுரர் தேர் வடம் பிடிக்குங்காலம் சித்திரை-மீ சித்திரை நட்சத்திரம். (2) ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தேர்வடம் பிடிக்குங்காலம் சித்திரை மாதம் அஸ்த நட்சத்திரம். இத்தேர், பவானி, திருவாளர் பழ. ப. தேவராயஞ்செட்டியாரவர்களால் தமது சொந்தப்பொறுப்பில் தெய்வதிருப்பணிக்கெனச் செய்துவைக்கப்பெற்றுள்ளது. இதுவன்றி அத்தனிகரால் பஞ்சமூர்த்திகள் எழுந்தருள்வதற்கு அழகிய சப்பிரங்களும் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுடன் அந்நல்லார் சிவதிருப்பணிக்கென்றே நந்தவனம் வைத்துப் புஷ்பமாலைகள் தொடுத்துப் பூசைவேளைக்குப் பெருமானுக்குச்சாத்துவதற்கு நந்தவனமும் முன்னோர்கள் காலத்திலிருந்தே வைத்து வளர்க்கப்பெற்று வருகிறது. (3) ஸ்ரீ காசி விஸ்வநாதர் தேர்வடம் பிடிக்குங்காலம், பங்குனி உத்திரம். (4) ஸ்ரீ செல்லாண்டியம்மன் தேர்வடம் பிடிக்குங்காலம் மாசி மாதம். ஷை இவ்வுற்சவமும் பொதுஜனங்களால் சிறப்பாய் நடைபெற்று வருகிறது. (5) அநுமந்தராயன் தேர்வடம் பிடிக்குங்காலம் பங்குனி-மீ ஸ்ரீ இராமநவமி. ஷை உற்சவம் வியாசராய மடத்தின் தலைவர் ஆதரவில் சிறப்பாய் நடைபெற்று வருகிறது.

KOVILOOR ANDAVAR
A. No. 26037

முன்னொரு காலத்தில் காவிரிநதி பெரும் பிரவாகம் எடுத்துவந்தபோது பிரவாகத்தைப் "பதுமகிரி" தடுத்து நின்றது. அது பொருத காவிரி எல்லாம் வல்ல இறைவனிடத்துச்சென்று முறையிட்டதென்றும், இறைவன் அருள் சுரந்து பதுமகிரியை வெண்டாமரையைப்போல் நீரில் மிதக்கும்படி செய்தனரென்றும், மலை தாழ்ந்து நின்றதால், காவிரி தன்னிச்சைப்படி சென்றனளென்றும், பெரியோர்களால் வழங்கப்பட்டுவரும் கன்னபரம்பரைக் கதை. இது உண்மையென்பதற்கு அம்மலை வெண்ணிறத்தாமரையைப்போன்ற நிறத்தோடிருப்பதும், சுமார் மூன்று பர்லாங்கு தூரம் வரையில் காவிரி நதியில் பரந்துள்ள பாறைகள் வெண்மை நிறத்தோடு விளங்குவதும் சிறந்த சான்றுக்களாம். காவிரி, குடகு இராச்சியத்திலுள்ள சையகிரியிலுற்பத்தியாகி, பிரவகித்து வருவதாகப் பவாநித்தல புராணம் கூறுகிறது.

வாழி யந்தணர் வானவ ரானிரை
வாழி வையக மாதவ ரன்பர்கள்
வாழி தென்னள கேசன் மலர்க்கழல்
வாழி யாரண வல்லிபொற் றுள்களே"

முற்றுப் பெற்றது.

---

வில்லார் வரையாக மாநாக நாணாக வேடங் கொண்டு
புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும் புலியு மானும்
அல்லாத சாதிகளும் அங்கழன் மேற்கைகூப்ப வடியார் கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல வருள்புரியுந் திருநணாவே. 6

கானார் களிற்றுரிவை மேன்மூடி யாடர வொன்றரைமேற் சாத்தி
யூனார் தலையோட்டி லூணுகந் தானுறைக்கந்த கோயிலெங்கு
நானா விதத்தால் விரதிக ணன்னாமமேயேத்தி வாழ்த்தத்
தேனார் மலர்கொண் டடியா ரடிவணங்குந் திருநணாவே. 7

மன்னீ ரிலங்கை யர்தங் கோமான் வலிதொலைய விரலா லூன்றி
முந்நீர்க் கடனஞ்சை யுண்டார்க் கிடம்போலு முனைசேர் சீய
மந்நீர்மை குன்றி யழலால் வலிகுறைய வழியு முன்றிற்
செந்நீர் பரப்பச் சிறந்துகரி யொளிக்குந் திருநணாவே. 8

மையார் மணிமிடற்றன் மங்கையோர் பங்குடையான் மனைக டோறுங்

கையாற் பலியேற்ற கள்வனி டம்போலுங் கழல்க ணேடிப்
பொய்யா மறையானும் பூமியளந் தானும் போற்ற மன்னிச்
செய்யா ரெரியா முருவமுற வணங்குந் திருநணாவே. 9

ஆடை யொழித் தங்கமணே திரிந்துண்பா ரல்லல் பேசி
மூடுருவ முகந்தா ருரையகற்று மூர்த்தி கோயி
லோடுநதி சேருநித் திலமு மொய்த் தகிலுங் கரையிற் சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றி யொளி பெருகுந் திருநணாவே. 10

கல்வித் தகத்தாற் றிரைசூழ் கடற்காழிக் கவுணி சீரார்
நல்வித் தகத்தா லினிதுணரு ஞானசம்பந்த னென்னும்
சொல்வித் தகத்தா லிறைவன் றிருநணா வேத்து பாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியில ரிம்மண் ணின்மேலே, 11

திருச்சிற்றம்பலம்.

## பவானித் திருப்புகழ்.

"கலை மேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி
பல மாய வாதிற் பிறழாதே
பதி ஞான வாழ்வைத் தருவாயே
மலை மேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா!
சிலை வேட சேவற் கொடியோனே
*திருவானி கூடற் பெருமாளே."

### முக்கியக் குறிப்பு.

"வானி" என்ற பெயர், திருநணா என்னும் சிவதலத்தில் காவிரி யாற்றிற் கூடும் நதியின் பெயர். திரு என்பது அடைமொழி. "வாணி" என்பது மருவு மொழி. இது இப்பொழுதும் நடைமுறையில் உள்ளது.

தமிழ் வளர்த்த தென்னவர் அரசுபுரிந்ததும் தமிழ்ச் சங்கமிருந்ததுமாகிய தென்மதுரைக்கும் "கூடல்" என்ற பெயருண்டு. அது வாணி கூடியதால் ஏற்பட்ட பெயரல்ல. ஆலவாய், சோமசுந்தரக்கடவுளால் மேகங்கள் நான்கு மாடங்களினும் சேர்ந்ததால் வந்த பெயர். அதனால் "நான் மாடக்கூடல்" எனப் பெயர் சிறந்தது. திருப்புகழைப் பதிப்பித்தவர்கள் "வாணிகூடல்" என்பதை மதுரை எனக் கொண்டனர். காரணம் அப்பதியில் தமிழ்ச்சங்க மிருந்தமை கருதிப்போலும்! அது பொருந்தாது.

ஆதலால், * "திருவானி கூடல்" என்ற பெயர், திருநணா என்னும் பவாநி கூடல் தலத்துக்கு உரிய பெயரென்பதை இத்தலத்து ஆலயத்துள்ள கல்வெட்டு, தலபுராணம் சங்கநூல், உலகவழக்கு முதலிய பல் வகைச் சான்றுகளால் உறுதி பெறுகிறது.

மாடர்ன் பிரஸ், கோயமுத்தூர்.